பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை
ரூபா
6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 25 திங்கட்கிழமை (09-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:225

# ஜனாதிபதி மீது எதிர்க்கட்சிகள் குற்ற விசாரணைப் பிரேரணை!

## அல்லாரையில் பெண் மீது சனி இரவு பாலியல் வல்லுறவு

வடமராட்சி,ஜூலை9

அல்லாரையில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் தனது வயோதிபத் தாயுடன் வீட்டில் இருந்த 42 வயதுப் பெண் ஒருவர் சீருடையினர் எனக் கருதப்படும் இருவரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

பிரஸ்தாப தாயையும் மகளையும கொடிகாமம் பொலீஸார் நேற்று மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

பிரஸ்தாப பெண்ணும் அவரது 82 வயதுடைய தாயும் வீட்டில் நித்திரையில் இருந்த சமயம் வீட்டின் கதவை உடைத்து உட்புகுந்த சீருடை தரித்தவர்கள், தாயைத் தாக்கிவிட்டு, மகளைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

வைத்திய பரிசோதனைக்காக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றம் கலைக்கப்படுவதை தவிர்க்க புதிய திட்டம் தயாராகின்றது

கொழும்பு,ஜூலை9

**புதிய அரசு ஒன்றை அமைக்கும் எதிர்க்கட்சிகளின் முயற்சியைத் தடுக்கும் நோக்குடன் தற்போதைய நாடாளுமன்றத்தை விரைவில் ஜனாதிபதி கலைத்துவிடுவார் எனச் செய்திகள் வெளியாகியிருப்பதை அடுத்து -**

**நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியாத நிலையை ஏற்படுத்தும் நோக்குடன், அவருக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றை அவசர அவசரமாகக் கொண்டுவரும் முயற்சியில் எதிர்க்கட்சிகள் முனைப்பாக இருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் சபாநாயகரைத் தவிர, இப்போது அரசுத் தரப்புக்கு ஆக 109 உறுப்பினர்களின் ஆதரவே உள்ளது. எதிரணித் தரப்பில் 115 எம்.பிக்கள் உள்ளனர். இவர்களின் ஆதரவோடு புதிய அரசு ஒன்றை அமைக்கும் முயற்சியில் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. முயன்று வருகின்றது.

தமது தரப்பிலிருந்து ஆட்சி கைமாறுவதை விரும்பாத ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, எதிர்க்கட்சிகள் ஆட்சியைப் பிடிப்பதற்கு முன்னர் தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு, புதிய பொதுத் தேர்தல்களை நடத்துவது உசிதமானது எனக் கருதுகின்றார்.

எனினும் ஒரு பொதுத் தேர்தல் நடந்து ஒரு வருடத்துக்குள் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால், தற்போதைய நாடா

(12 ஆம் பக்கம் பார்க்க)

### சர்வதேச கண்டனங்களை அடுத்து

## வடக்கில் வான் தாக்குதல் தற்காலிகமாக நிறுத்தம்?

கொழும்பு,ஜூலை9

அமெரிக்க மற்றும் இந்தியத் தரப்புகளால் தெரிவிக்கப்பட்ட கடும் விமர்சனங்களை அடுத்து யாழ்.குடாநாட்டில் விடுதலைப் புலிகள் மீதான வான் தாக்குதல்களை ஸ்ரீலங்கா அரசு தற்காலிகமாக இடை நிறுத்தியிருப்பதாக நம்பத்தகுந்த இராணுவ வட்டாரங்கள் நேற்று முன்தினம் தகவல் வெளியிட்டதாக செய்தி நிறுவனம் ஒன்று அறிவித்துள்ளது.

கடந்த வார இறுதியில் கிளர்ச்சியாளர்களின் நிலைகள் மீது பல தொடர்ச்சியான தாக்குதல்கள் நடத்தப்பட்ட பின்னர், புதிய தாக்குதல் உத்தரவு ஏதும் விமானப்படைக்கு வழங்கப்படவில்லை என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவே வான் தாக்குதல்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்ற ஊகத்தை உருவாக்கியிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் -

அடையாளம் காணப்பட்டுள்ள பல்வேறு இலக்குகளைத் தாக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

### கதிரவெளி - கட்டுமுறிவுக்குளம் வீதியில்

## புலிகள் பிரதேசத்துக்குள் ஊடுருவி படையினர் கிளைமோர் தாக்குதல்!

### டிராக்டரில் சென்ற 4 சிவிலியன்கள் படுகாயம்

மட்டக்களப்பு,ஜூலை9

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் இருக்கும் கதிரவெளி - கட்டுமுறிவுக்குளம் வீதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல் ஒன்றில் பொதுமக்கள் நால்வர் படுகாயமடைந்தனர்.

அந்த வீதியில் பொதுமக்கள் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரமே கிளைமோரில் சிக்கியது.

விசேட அதிரடிப்படையின் ஊடுருவித் தாக்கும் அணி ஒன்றே புலிகளின் அந்தப் பிரதேசத்துக்குள் ஊடுருவி இத்தாக்குதலை நடத்தியிருப்பதாக இராணுவக்கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் இருந்து மட்டக்களப்புக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

தாக்குதல் நடந்த இடத்தில், பின்னர் தேடுதல் நடத்திய புலிகள் அப்பகுதியில் மரம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த மற்றொரு கிளைமோர் கண்ணியையும் சிறிலங்காப் படையினர் பயன்படுத்தும் கிரனேட்டுக்கள் மற்றும் தண்ணீர்க்கான் என்பவற்றையும் மீட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த கே.ரவீந்திரன் (வயது 49), ஐ.அருமைநாயகம் (வயது 46), ஜீவனரமேஸ் (வயது 23), ரி.கோபாலபிள்ளை (வயது 34) ஆகிய நால்வரும் வாழைச்சேனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுப் பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்புக்கு மாற்றப்பட்டனர். இவர்கள் பயணஞ்செய்த உழவு இயந்திரம் பலத்த சேதமடைந்தது.

கிழக்கில் அண்மைக்காலத்தில் விசேட ஊடுருவும் படையினர் புலிகளின் பிரதேசங்களுக்குள் ஊடுருவித் தாக்கும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி இருப்பதாகச் சில செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திவ்வியன் விடுதலையாகும் வரை பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும்!

### மாணவர் ஒன்றியம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை9

கைது செய்யப்பட்டு காங்கேசன் துறை பயங்கரவாதத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளர் கிருஷ்ணசாமி திவ்வியனை விடுதலை செய்யும் வரை தமது பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும் என மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் நேற்று இரவு உதயனுக்குத் தெரிவித்தனர்.

பகிஷ்கரிப்பு இன்று தொடர்ந்து நடைபெறும். இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக சகல பீட மாணவர்களுக்குமான பொதுக்கூட்டம் ஒன்று இன்று காலை 9.30 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும் - என்று அப்பிரதிநிதி மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் -

காங்கேசன்துறை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ள திவ்வியனை அவரது தாயார், பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பேராசிரியர் க.சிற்றம்பலம், பல்கலைகழக ஊழியர் சங்கச் செயலாளர், மாணவர் ஒன்றியத் தலைவர் ஆகியோர் சென்று பார்வையிட்டு உரையாடினர்.

(உ)

## மோதலில் சிப்பாய் பலி!

கொழும்பு,ஜூலை9

பிரமணாளங்குளம் சோதனை நிலையத்துக்கு வடகிழக்கே - இரணை இலுப்பங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

அதேதினம் நாகர்கோயில் பகுதியில் இடம்பெற்ற இருவேறு சம்பவங்களில் விடுதலைப் புலிகளின் ஆறு உறுப்பினர்கள் உயிரிழந்தனர் என்றும் தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

(ஐ-3)

**ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - 3 நாளைய உதயனுடன் கிடைக்கும்.**

## எதிரணியின் யோசனைகளை அரசு புறக்கணிக்கக் கூடாது!

### ஆளும் தரப்பு எம்.பிக்கள் ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு,ஜூலை9

எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் கோரிக்கைகள் மற்றும் ஆலோசனைகளை நிராகரிக்காமல், அவர்களுடன் கலந்துரையாடி ஆட்சியை நடத்த முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பின்வரிசை எம்.பிக்களான பத்துப் பேரும் மேற்கண்டவாறு ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் கோரியுள்ளனர்.

பின்வரிசை எம்.பிக்களான பந்துல குணவர்த்தனா, ஆனந்த முனசிங்க ஆகியோர் உட்படப் பத்துப் பேரும் கூட்டாக எழுதியுள்ள கடிதத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாடு அழிவுப்பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. எம்மை நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்துள்ள மக்கள் பெரும் கஷ்ட நிலையில் உள்ளனர். அவர்களுக்காக நாம் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

எதிர்க்கட்சியினர் தெரிவிக்கும் ஆலோசனைகள், கோரிக்கைகள் ஆகியவற்றை நிராகரிக்காமல் அவர்களுடன் கலந்துரையாட வேண்டும்.

அவர்களின் ஆலோசனைகளுடன் ஆட்சியை முன்னெடுக்க வேண்டும். அதிகாரம், பதவி என ஆசை கொள்ளாது தேசிய நலனில் அக்கறை கொண்டு அரசு செயற்பட வேண்டும் - என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

குறிப்பிட்ட பின்வரிசை எம்.பிக்களுக்கு அரசு வாகன வசதி எதனையும் இதுவரை வழங்காததால், அவர்கள் அரசு மீது அதிருப்தி உற்ற நிலையில் இருப்பதாகக் கொழும்புச் செய்திவட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

(ஐ-3)

### பத்து ஆண்டுகளின் பின்னர்

## இஸ்ரேல் நாட்டுத் தூதர் கொழும்பில் பதவியேற்பு!

கொழும்பு,ஜூலை9

இலங்கைக்கான தூதுவர் ஒருவரை இஸ்ரேல் நியமித்திருக்கின்றது.

சிரேஷ்ட இராஜதந்திரியான டேவிட் மட்னயி (David Matnai) என்பவரே இலங்கைக்கான இஸ்ரேல் தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். அவர் தமது நியமனப் பத்திரங்களைக் கடந்த வெள்ளியன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைத்ததாக இலங்கை வெளியுறவு அமைச்சு தெரிவித்தது.

இஸ்ரேலுடன் துண்டிக்கப்பட்டிருந்த தனது இராஜதந்திரத் தொடர்புகளை 1985 ஆம் ஆண்டு இந்தியாவின் கடும எதிர்ப்புக்கு மத்தியில் இலங்கை மீள ஆரம்பித்தது.

எனினும் 1990 இல் பிரேமதாஸா நிர்வாகம் மீண்டும் தொடர்புகளைத் துண்டித்துக்கொண்டிருந்தது.

அதன்பின்னர் -

கடந்த ஆண்டு மே மாதம் யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகளிடம் பறிகொடுக்கும் மிக நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கைப் படை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய அரசு அமைக்க இணங்கினால் ஆளும் கூட்டணியை விட்டு விலகுவோம்!

## இடதுசாரிக் கட்சிகள் அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு,ஜுலை9

ஐ.தே.கட்சியுடன் இணைந்து தேசிய அரசு ஒன்றை அமைக்க அரசு முன்வந்தால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இருந்து வெளியேறுவோம். இவ்வாறு அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகள் எச்சரித்திருக்கின்றன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளான சமசமாஜக்கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியுமே இப்படி எச்சரிக்கை விடுத்துள்ளன.

நீதியமைச்சரும், சமசமாஜக் கட்சி முக்கியஸ்தருமான பட்டி வீரக்கோன் இது சம்பந்தமாகக் கருத்து வெளியிடுகையில் தேசிய அரசு ஒன்று அமைப்பது தொடர்பாக பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்து வரும் கருத்துக்கள் அவரின் தனிப்பட்ட கருத்துக்களேயாகும். ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின நிறைவேற்றுக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னரே உத்தியோகபூர்வமான முடிவுகளைக் கூறமுடியும் - என்று தெரிவித்தார்.

அண்மையில் தேசிய தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில், தேசிய அரசு ஒன்றை அமைக்க ரணில விக்கிரமசிங்க முன்வந்தால் பிரதமர் பதவியை அவருக்கு வழங்கத் தாம் தயாராக இருப்பதாக பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-3)



யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளைப் பார்வையிடுவதற்காக பொதுமக்கள் சிறைச்சாலை வாசலில் கால்கடுக்கக் காத்து நிற்கும் காட்சியை நாளாந்தம் அவதானிக்கலாம்.

கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னர் சிறைச்சாலை வாசலில் காத்துநின்ற மக்களை எமது படப்பிடிப்பாளர் 'கிளிக்' செய்து கொண்டார்.

*(படம்:- றோய் மதிவதனன்)*

# நாட்டில் நடைபெறும் நிகழ்வுகள் ஜனநாயக மரபுகளுக்கு முரணானவை

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விசனம்

கொழும்பு,ஜுலை9

ஓர் அரசு பெரும்பான்மைப் பலத்தை இழந்துவிடும்போது ஜனநாயக மரபுகளுக்கு ஏற்ப அடுத்த பெரும்பான்மைப் பலத்தைக் கொண்ட அணியிடம் அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டும். ஆனால் இலங்கையில் நடப்பது ஜனநாயக மரபுவழிக்கு முன்றிலும் முரணானதாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இப்படிக் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் தொழில்சார் நிபுணர்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

நாடாளுமன்றத்தில் எதிர்கட்சியில் உள்ள உறுப்பினர்கள் கையொப்பத்துடன் சபாநாயகரிடம் மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது. இம்மாதத்தில் மூன்றாம் வாரத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்துக்கு எடுக்கவேண்டும் என்று அந்த மனுவில் கேட்கப்பட்டுள்ளது.

அடுத்த சில தினங்களில் அரசியலில் மாற்றங்கள் நிகழலாம்.

அரசு பெரும்பான்மைப் பலத்தை இழந்துள்ள போதிலும் தோல்வியைச சந்திக்க விரும்பாமல், ஜனநாயகத்துக்கு முரணாகச் செயற்பட முனைந்துள்ளது - என்றார்.

உலகில் எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் நடைபெறாத வகையில் எமது நாட்டில் அண்மைக்காலமாக ஜனநாயகத்திற்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் மக்கள் சக்தியொன்று அணிதிரள்வதன் மூலமே இந்தப் பேராபத்திலிருந்து நாட்டைக் காப்பாற்ற முடியும் எனவும் எதிர்கட்சித் தலைவர் அங்கு தெரிவித்தார். (ஐ-3)

# சாரதிகளுக்கு அபராதம் விதிக்கும் நடைமுறை குறித்து அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜுலை9

குடாநாட்டில் போக்குவரத்து விதிகளை மீறும் வாகன ஓட்டிகளுக்கு அந்த இடத்திலே அபராதம் விதிக்கும்போது பொலீஸார் நேரடியாக அவர்களிடமிருந்து பணம் வாங்கக் கூடாது என்று யாழ்.நீதிவான் ஆர். விக்னராஜா வடபிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

யாழ்.நீதிமன்றத்தில் இடம்பெற்ற விபத்து மரணம் தொடர்பான வழக்கு ஒன்றிலேயே இந்த உத்தரவை நீதிவான் விடுத்துள்ளார்.

அந்த உத்தரவில் நீதிவான் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

போக்குவரத்து விதிகளை மீறும் வாகனச் சாரதிகளுக்கு அந்த இடத்திலேயே அபராதம் விதிக்கும் நடைமுறைக்கு விரோதமாகச் சில பொலீஸார் செயற்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அபராதம் விதிக்கும் போது பொலீஸாரால் வழங்கப்படும் ரசதை தபால் நிலையத்திலோ நீதிமன்றத்திலோ சமர்ப்பித்துப் பணத்தைச் செலுத்த வேண்டும் என்பதே நடைமுறையாகும்.

இந்த நடைமுறைக்கு ஏற்ப அபராதத்தைச் செலுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். அது தொடர்பான பணிப்புரைகளைச் சகல பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் அனுப்ப வேண்டும் - என்று அதில் குறிப்பிட்டுள்ளார். (ஐ-3)



அண்மையில் நடைபெற்ற சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஆலய முன்றிலில் இலங்கை வங்கியின் மானிப்பாய்க் கிளை நறுவிய விசேட கரும பீடத்தில் கலந்துகொண்ட இலங்கை வங்கி பிரதேச முகாமையாளர் பீ.ஏ.அருமைநாயகம் அங்கு நிலையான வைப்புக் கணக்கொன்றைத் திறந்த மா.கந்தசாமி என்ற வாடிக்கையாளருக்கு அதற்கான பத்திரத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம். வட பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம், மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளர் சி.கிருஷ்ணானந்தன், நிறைவேற்று உத்தியோகத்தர் க.இலட்சுமண சர்மா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (ஐ-135)

## சுழிபுரம் பகுதியில் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை

மூளாய்,ஜுலை9

சுழிபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது.

இதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் மதுவரித் திணைக்கள ஊழியர்களும் சுழிபுரம் மத்தி கிராம -உத்தியோகத்தர்களும் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த திங்களன்று மேற்படி பகுதியில் வீடு ஒன்றில் இருந்து சுமார் 75 போத்தல் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது. இவற்றைவிட மேலும் இரண்டு வீடுகளில் இருந்தும் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த கசிபபு மீட்கப்பட்டுள்ளது. (ஐ-99)

## பருத்தித்துறை-மருதங்கேணி வீதி திருத்த வேலை ஆரம்பம்

வடமராட்சி கிழக்கு,ஜுலை9

நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் இருந்துவந்த பருத்தித்துறை - மருதங்கேணி வீதி திருத்தும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வல்லிபுரக் கோயிலில் இருந்து அம்பன் வரையிலான 7 கிலோ மீற்றர் முதலில் திருத்தப்படவுள்ளது. இத்திருத்த வேலைக்காக 16 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் இருந்தமையினால் அப்பகுதி மக்கள் மிகுந்த போக்குவரத்துக் கஷ்டத்தை எதிர்நோக்கிவந்தனர். (ஐ-182)

# நன்னீர்க் கிணறுகள் பலவும் உவர் நீராக மாறுகின்றன

## வலி.மேற்கில் திடீரென அதிகரிப்பு

வலிகாமம் மேற்குப் பகுதிகளில் உள்ள நன்னீர்க் கிணறுகள் பல உவர் நீர் கிணறுகளாக மாற்றமடைந்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வலி.மேற்கு பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா இத்தகவலை வெளியிட்டார்.

குறுகிய காலப்பகுதி ஒன்றுக்குள அராலிப் பகுதியில் உள்ள சுமார் 24 நன்னீர் கிணறுகள் உவர் நீராக மாற்றமடைந்துள்ளன. இதேபோன்று ஏனைய பகுதிகளிலுள்ள பல நன்னீர் கிணறுகளும் படிப்படியாக உவர்த்தன்மை அடைந்து வருகின்றன. மிக அண்மையில் வலி.மேற்கில் நடத்தப்பட்ட நன்னீர்க் கிணறுகள் தொடர்பான கள நிலை ஆய்வு மூலமாக மேற்படி தகவல்கள் தெரியவந்ததாகப் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார்.

நன்னீர்க் கிணறுகள் இவ்வாறு உவர்த்தன்மை அடைவதற்கான காரணங்களைக் கண்டறிவதும், உவர்த்தன்மை அடையாமல் தடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதும் மிகவும் அவசியம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. *(மற்றொரு செய்தி 4 ஆம் பக்கத்தில்)* (ஐ-99)

# வாசகர் திருமுகம்

## தென்மராட்சியில் பாடசாலையை திறந்தால் மட்டும் போதுமா?

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் மீண்டும் பழைய இடத்தில் இயங்கும் என பலாலி படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

மீசாலையில் மக்கள் மீளக் குடியமர்ந்தாலும் அங்கே அடிப்படை வசதிகள் இல்லை, வைத்திய வசதிகள் இல்லை, கடைகள் இல்லை. ஆகவே அங்கே இவைகளைத்தான் முதலில் இயங்க வைக்க வேண்டும். இதனைப் படைத் தரப்பு அறியவில்லைப் போலும்.

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் ஆரம்பத்தில் தரம் ஒன்று தொடக்கம் தரம் எட்டு வரையிலான வகுப்புகளே நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குடும்பம் ஒன்றில் ஒரு மாணவன் தரம் 6 இலும், மற்றைய மாணவன் தரம் 10 இலும் படித்தால் தரம் 10 மாணவனின் நிலை என்ன? இது ஒரு குடும்பத்தில் மட்டுமா நடக்கும்? இதனால் குடும்பங்கள் இரண்டு இடங்களில் பிரிந்து இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு குடும்பங்கள் இரண்டு இடங்களில் வசிக்க வேண்டி ஏற்படுவதால் பெரும் பொருளாதார நெருக்கடிகளும் ஏற்படுகின்றன.

இந்த விவகாரம் குறித்து கல்வித் திணைக்களம்கூட யோசிக்கவில்லைப் போலும். படைத் தரப்பின் அறிவிப்பு வந்தவுடன் கல்வி அதிகாரிகள் அதற்கு "ஆமாம்சாமி" போடுவது சரியா?

மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை யார் பொறுப்பேற்பது? பாடசாலைச் சமூகத்துக்கு இன்னமும் இது விளங்கவில்லையா?

*அல்லாரை.* - பாதிக்கப்பட்ட **அல்லாரையூர் மாணவன்**

## அதிக ஆலயங்கள் தேவையா?

யாழ்.மாவட்டத்தில் தற்போது மக்களின் எண்ணிக்கை மிகவும் மோசமாகக் குறைந்து கொண்டு செல்கிறது. ஆனால் புதிய புதிய ஆலயங்கள் மட்டும் மிக வேகமாக உதயமாகின்றன. அதாவது சராசரியாக 20 பேருக்கு ஓர் ஆலயம் என்ற கணக்கில் கோயில்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இதனை மேலும் ஊக்குவிக்கும் முகமாக மாண்புமிகு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா சிறு கோயில்கள் அமைப்பதற்கும், புனருத்தாரணம் செய்வதற்குமாக தலா 10 லட்சம், 15லட்சம் என நிதி ஒதுக்குகின்றார். அண்மையில் கூட மிகவும் அதிகமான தொகையை ஆலயங்களுக்கு அவர் ஒதுக்கி இருந்தார்.

இந்த நிதியை எல்லாம் சிறிய சிறிய ஓலைக் கொட்டில் அமைத்து குறைந்த வசதிகளை உடையதும், மழை காலத்தில் வெள்ளத்தில் நீந்துகின்றதுமான அகதி முகாம்களை வசதிகள் நிறைந்ததாக அமைக்கப் பயன்படுத்தலாம். எத்தனையோ பாடசாலைகள் ஓலைக் கூரையின் கீழும், மண் நிலத்திலும் இயங்குகின்றன. அவற்றை வசதிகள் நிறைந்ததாக அமைக்க உதவலாம்

இந்த நிதியைப் பயன்படுத்தி தென்னிலங்கையில் உள்ளதைப் போல் பெரிய தொழிற்பேட்டைகளை இங்கு அமைத்து வேலை வாய்ப்பில்லாத அநேகமானோருக்கு வேலை வாய்ப்பை வழங்கலாம்.

யாழ்நகரை தென்னிலங்கை நகரங்கள் போல் நவீனமயப்படுத்தலாம். யாழ்.பல்கலைக்கழகத்தை தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களுக்குக் கிடைக்கும் வசதிகளைப் போல் மிகவும் வசதிகள் நிறைந்ததாக அமைக்க உதவலாம். அநாதைச் சிறுவர் இல்லங்களுக்கு பொருளுதவி வழங்கி அவற்றைத் திறம்பட இயங்க வைக்கலாம்.

இந்த நிலை இப்படியே தொடருமேயானால் தமிழ்நாட்டில் உள்ள ஆலயங்களின் எண்ணிக்கையிலும் பார்க்க யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்களின் எண்ணிக்கை மிக அதிகமாகலாம்.

*யாழ்ப்பாணம்.* - **யாழேந்தி.**

# மரண அறிவித்தல்

## வீரவாகு பொன்னுத்துரை (அருள்)

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் சிவப்பிரகாசம் வீதியை வதிவிடமாகவும் கொண்ட வீரவாகு பொன்னுத்துரை (அருள்) நேற்று (08-07-2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும் பத்மராணி, ஜெயானந்தன், ரகுநாதன், சத்தியசீலன், ஜெயசிறி ஆகியோரின் அருமைத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-07-2001) திங்கள் பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*21/3, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.* (C/17342)

தகவல்:- தவராசசிங்கம் (மருமகன்)

கல்வி நிலையம்
*பிறவுண் வீதி, யாழ்நகர்.*
**A/L 2003**
**இணைந்த கணிதம்**
PURE. *இருபடிச் சமன்பாடு* | APP. *வேகநேர வளையி*
ஆரம்பம்:-- 10-07-2001
(89881) செல் - 4.00



ஸ்பெயினில் பாம்ப்லோனா நகரில் வருடாந்தம் நடைபெறும் 'மஞ்சு விரட்டு' பாணியிலான புகழ்பெற்ற 'சான் பெயின்' எருது ஓட்டம் சமீபத்தில் நடைபெற்றது. சிறுவாசல் வழியே திறந்துவிடப்பட்ட எருதுகள் தம்மை மடக்கிப் பிடிக்க முயன்றவர்களைக் குத்தித் தூக்கியெறிந்து ஓடியதில் 9பேர் படுகாயமடைந்தனர். எருதுகள் ஓடிவரும் பாதையின் இரு மருங்கிலும் நிற்பவர்கள் அந்த எருதுகளை மடக்கிப்பிடிக்கும் இந்த வீர விளையாட்டு, உயிராபத்தை விளைவிப்பதாகக் கருதப்படுவதால், இதனைத் தடை செய்யவேண்டும் என்று கோரிக்கைகள் எழுப்பப்பட்டபோதும், எருது ஓட்ட விளையாட்டின் புராதன பெருமையால் ஆண்டுதோறும் இந்த வீர விளையாட்டு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு 'சான் பெயின்' எருது ஓட்டத்தில் தலைதெறிக்க ஓடிவரும் எருதுகள் தம்மைப் பிடிக்க முயற்சித்தவர்களைக் கொம்புகளால் குத்தித் தூக்கியெறியும் காட்சிகளே இவை.

# வெள்ளையர் - ஆசியர்கள் இடையே

# பிரிட்டனில் மீண்டும் இனக்கலவரம்!

## இருவருக்குக் கத்திக் குத்து; வாகனங்களும் தீக்கிரை!

லண்டன்,ஜூலை9

**வட மத்திய பிரிட்டனில் வெள்ளையர்களுக்கும் ஆசிய இனத்தவர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் மூண்ட இனக்கலவரத்தில் இருவர் கத்திக் குத்துக்கு இலக்காகிப் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். கலகம் தடுக்கும் பொலீஸார் மீது பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டதுடன் வாகனங்களும் தீக்கிரையாக்கப் பட்டன.**

பிரிட்டனின் வடமத்திய பிரதேசமான பெஸ்ட்போர்ட் நகரிலேயே இந்த இனக்கலவரம் ஏற்பட்டது

சுமார் ஒரு லட்சம் ஆசிய இனத்தவர்கள் வசிக்கும் பெஸ்ட்போர்ட்டில் அதிதீவிர வலதுசாரிக் கட்சியான தேசிய முன்னணி ஊர்வலம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருந்தது.

சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராகக் கடும்போக்கைக் கடைப்பிடிக்கும் இந்தக் கட்சியின் ஊர்வலத்தால், அசம்பாவிதங்கள் உருவாகலாம் என்பதால், பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு, தேசிய முன்னணியின் ஊர்வலத்துக்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டது.

இதனால் நகரும் பொதுக் கூட்டத்தை பெஸ்ட்போர்டில் தாம் நடத்தப்போவதாக தேசிய முன்னணியினர் அறிவித்தனர்.

இந்த நிலையில் குறிப்பிட்ட பகுதியில் 300க்கும் மேற்பட்ட ஆசிய இன இளைஞர்கள் நேற்றுமுன்தினம் அணிதிரண்டு பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

உலக அரங்கில்

அந்தக் கூட்டம் அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில், அங்கு வந்த வெள்ளையர் இனப் பிரமுகர்கள் அடங்கிய கும்பல ஒன்று, இனத்துவேஷக் கோஷங்களை எழுப்பியதையடுத்து கலவரம் மூண்டதாகக் கூறப்படுகிறது.

கலவரத்தின் போது ஆசிய இனத்தவரின் கடைகள், வாகனங்களால் மோதி உடைக்கப்பட்டதாகவும் -

கடைகளை உடைத்த வாகனங்கள் கொளுத்தப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

கடந்த மூன்று மாதகாலமாக பிரிட்டனின் கரையோர நகரங்களில் இனக்கலவரங்கள் நடைபெற்ற போதும், மத்திய பகுதியில் இன மோதல்கள் இடம்பெறுவது இதுவே முதல் தடவை என்று கூறப்படுகிறது. (ஒ-6)

### ஆபிரிக்க ஒன்றிய உச்சி மாநாடு

ஆபிரிக்க ஒன்றிய உச்சி மாநாடு சாம்பியாவின் லுஸ்காவில் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெற உள்ள இந்த உச்சி மாநாட்டில ஆபிரிக்க நாடுகளின் வளர்ச்சி தொடர்பான விடயங்கள் ஆராயப்படவுள்ளன. (ஒ-6)

## தீவிரவாதிகளின் தாக்குதலில் 31 நேபாளப் பொலீஸார் பலி!

காத்மண்டு,ஜூலை9

நேபாளத்தில் மாவோயிஸ தீவிரவாதிகளின் தாக்குதல்களில் 31 பொலீஸார் கொல்லப்பட்டனர்.

தலைநகர் காத்மண்டுவிலிருந்து 120 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள சோதனைச் சாவடி ஒன்றின் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 22 பொலீஸார் கொல்லப் பட்டனர்.

மற்றொரு சம்பவத்தில், காத்மண்டுவுக்கு மேற்கே 90 கிலோ மீற்றர்கள் தொலைவில் பொலீஸ் நிலையத்தை தீவிரவாதிகள் தாக்கியதில் 9 பொலீஸார் கொல்லப்பட்டனர்.

நேபாளத்தில் கம்யூனிஸ ஆட்சியை ஏற்படுத்த போராடி வரும் மாவோயிஸ தீவிரவாதிகள், அரச குடும்பப் படுகொலைகளின் பின்னர் தாக்குதல் நடவடிக்கைகளை அதிகரித்திருப்பதும் -

1996ஆம் ஆண்டிலிருந்து போராடி வரும் இவர்களின் நடவடிக்கைகளில் இதுவரையில் சுமார் ஆயிரத்து 600 பேர் கொல்லப்பட்டதும் -

குறிப்பிடத்தக்கவை. (ஒ-6)

## என் வீட்டுப் பெண்களிடம் பொலீஸார் எல்லை மீறினர்

### மு.க. ஸ்டாலின் குற்றச்சாட்டு

சென்னை,ஜூலை9

தன்னைக் கைது செய்யும் நோக்கில், வீட்டுக்கு வந்த தமிழகக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலீஸார் அங்கிருந்த தனது குடும்பத்தைச் சேர்ந்த பெண்களோடு எல்லை மீறி நடந்ததாக சென்னை மேயர் மு.க. ஸ்டாலின் குற்றஞ் சாட்டியுள்ளார்.

மேம்பால ஊழல் வழக்கில் நீதிமன்றத்தில் சரணடைந்து நேற்றுமுன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய போது மேயர் மு.க.ஸ்டாலின் இந்தக குற்றச்சாட்டைத் தெரிவித்தார்.

இத்தகைய மனித உரிமைகளை மீறிச் செயற்பட்ட, சம்பந்தப்பட்ட பொலஸார் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதில் தான் உறுதியாக இருப்பதாகவும் -

ஆகவே அவர்கள் மீது வழக்குத் தொடரப்போவதாகவும் -

மேயர் மு.க.ஸ்டாலின் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். (ஒ-6)

### மரம் முறிந்து விழுந்ததில்

## பிரான்ஸில் இசை நிகழ்ச்சியின் போது பதினொரு பேர் உடல் நசுங்கி மரணம்!

பாரிஸ்,ஜூலை9

பிரான்ஸில் இசை நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, வேகமாக வீசிய காற்றினால் பாரிய மரம் ஒன்று முறிந்து பார்வையாளர் மீது விழுந்ததில் 11பேர் உடல் நசுங்கி இறந்தனர்.

ஸ்ரான்போக் நகரில் உள்ள பூங்கா ஒன்றில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.



பலரைப் பலிகொண்ட பாரிய மரம் சரிந்து விழுந்து கிடக்கும் காட்சி.

பூங்காவில் 'யீடிஷ்' இசைக் குழுவின் நிகழ்ச்சி நடைபெற்றது. நூறுக்கும்மேற்பட்டவர்கள் இசை நிகழ்ச்சியை ரசித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது திடீரென்று காற்றின் வேகம் அதிகரித்தது. மணிக்கு சுமார் 150 கிலோ மீற்றர்கள் வேகத்தில் காற்று வீசத் தொடங்கியது. அதனால் ரசிகர்கள் அங்கு இருந்த பெரிய கூடாரத்தின் அடியில் பாதுகாப்புக்காக நின்றனர்.

அப்போது கூடாரத்தின் அருகில் நின்ற பாரிய மரம் ஒன்று, காற்றின் வேகத்துக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் வேரோடு பெயர்ந்து கூடாரத்தின் மேல் விழுந்து அதனைத் தகர்த்து, மக்களையும் நசுக்கியது.

இதில் 11பேர் உடல் நசுங்கி இறந்தனர். 80பேர் வரை காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

அவர்களில் 20பேர் கழுத்து எலும்பு முறிந்தும், தலையில் பலத்த காயமடைந்தும், ஆபத்தான நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தையடுத்து பூங்காவில் முறியும் நிலையிலிருந்த மரத்தை கவனக்குறைவாக விட்டு வைத்திருந்தது குறித்து விசாரணை நடத்தப் படுகிறது.

ஸ்ரான்போக் நகரில் சம்பவ தினத்தன்று, சுமார் 20 ஆயிரம் பேர் கலந்து கொள்வதாக எதிர்பார்க்கப்பட்ட மற்றொரு நிகழ்ச்சி காலநிலை காரணமாக அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் அசம்பாவிதம் இடம்பெற்ற இசை நிகழ்ச்சிக்கு அனுமதி வழங்கப்பட்டது தொடர்பாகவும் விசாரணை நடைபெறுகிறது. (ஒ)

## மேற்காசியப் பிராந்தியத்தில் போரைத் தூண்டுகிறார் ஷெரோன்

### சிரிய ஜனாதிபதி பஷார் சாடல்

பெர்லின்,ஜூலை9

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் மேற்காசியப் பிராந்தியத்தில் போர் ஒன்றை நடத்தத் திட்டமிடுவதாக சிரிய ஜனாதிபதி பஷார் அல் அஸாத் குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஜேர்மனிய சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் ஷெரோன் இஸ்ரேலிய அரசியல் நெருக்கடியைப் போக்க வழி தெரியாது, பிராந்தியத்தில் மோசமான யுத்தத்தை ஏற்படுத்திப் பயனடைய முயற்சிப்பதாகவும் பஷார் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும் ஆட்சிக்கு வந்து நூறு நாள்களுக்குள் பலஸ்தீனர்களை ஒழித்துக் கட்டுவதாக உறுதியளித்தே இஸ்ரேல் பிரதமர் ஷெரோன் ஆட்சிக்கு வந்ததாகத் தெரிவித்த பஷார், இஸ்ரேலின் எல்லைகளுக்கு அப்பாலும் ஷெரோன் பிரச்சினைகளை உருவாக்குவதாகக் குறிப்பிட்டார். (ஒ-6)

## அமெரிக்க அரசு மேற்கொள்ளும் ஏவுகணை எதிர்ப்புச் சோதனை

அமெரிக்க அதிபராக புஷ் பதவியேற்ற பின்னர் முதற்தடவையாக நடத்தப்படும் ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டப் பரிசோதனை எதிர்வரும் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை ஒன்றை, பரீட்சார்த்தமாக ஏவப்படும் பாதுகாப்பு ஏவுகணை எதிர்த்துச் செயலிழக்கச் செய்வதே இந்தப் பரிசோதனையின் நோக்கமாகும்.

இராணுவ ரீதியில் சுடப்பட்ட துப்பாக்கி ரவையை இன்னொரு ரவை தாக்கித் தடுப்பது போலானது இது.

இதுவரை இந்தத் திட்டத்தின் கீழ், முன்னாள் அதிபர் பில் கிளின்ரன் நிர்வாகம் 3 பரீட்சார்த்த சோதனைகளை நடத்தியிருந்தது.

அவற்றில் இறுதியாக இடம்பெற்ற இரு சோதனைகளும் தோல்வியில் முடிந்தன.

கடந்த வருடம் ஜூலை 7 ஆம் திகதி பல கோடி டொலர்கள் செலவில் நடைபெற்ற ஏவுகணை எதிர்ப்புத்திட்டச் சோதனை தோல்வியடைந்தது.

ரஷ்யா உட்பட உலகின் வளர்ந்த நாடுகள் பலவற்றினதும் எதிர்ப்புகளை மீறி அமெரிக்கா ஏவுகணை எதிர்ப்புச் சோதனைகளை நடத்திவருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

## மரணதண்டனை வழங்குவதில் முன்னணி வகிக்கும் சீன அரசு

பெய்ஜிங்,ஜூலை9

கடந்த மூன்று மாதங்களில் சீனாவில் ஆயிரத்து 783 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக சர்வதேச மனித உரிமைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனைவிட குற்றவாளிகளுக்கு எதிரான தீவிர நடவடிக்கைகளை கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து மேற்கொண்டுள்ள சீனாவில் மேலும் இரண்டாயிரத்து 960 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்றும் -

கடந்த மூன்றாண்டுகளில் உலகம் முழுவதிலும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டவர்களின் தொகையைவிட, சீனாவில் கடந்த மூன்று மாதங்களில் மரணதண்டனைக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகம் என்றும் -

அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டது.

இந்த நிலையில் மற்றைய நாடுகளில் மரணதண்டனை மிக அபூர்வமாகவே நிறைவேற்றப்படுவதால், மரண தண்டனை தொடர்பான விடயத்தில் சீனா மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் என்று சர்வதேச மனித உரிமைகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஒ-6)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ்

# தமிழ் மக்கள் பொலீஸில் பதியும்

# நடைமுறை இனியும் அவசியமா?

## பாதுகாப்புப் பிரிவினர், அரசியல்வாதிகள் மத்தியில் குழப்பம்

கொழும்பு, ஜூலை 9

அவசரகாலச் சட்டத்திற்குப் பதிலாகத் தற்போது நடைமுறைக்கு வந்துள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தமிழ் மக்களை பொலீஸ் நிலையத்தில் பதிவு செய்தல் மற்றும் கைதுகள், தடுத்து வைத்தல் போன்றவை தொடர்பாகத் தெளிவின்மையால் ஒரு குழப்ப நிலை தோன்றியுள்ளதாகப் பாதுகாப்புப் பிரிவு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இச்சட்டத்தின் கீழ் என்னென்ன செயற்பாடுகள் அடங்குகின்றன என்பது பற்றிய விவரங்கள் அறியப்படாததாலேயே இக்குழப்ப நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இது தொடர்பாகச் சில அரசியல்வாதிகளுடன் தொடர்பு கொண்டபோது தாங்களும் இச் சட்டம் தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும் தமக்கும் தெளிவின்மை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

தற்போது தமிழ் மக்களைப் பொலீஸ் நிலையங்களில் பதியுமாறு விடுக்கப்பட்டுள்ள பணிப்புரை இப் புதிய சட்டத்தின்கீழ் செல்லுபடியாகாது என்றும் தனியான திருத்தம் கொண்டு வருவதன் மூலமே இச் சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த முடியும் என்றும் சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

பொலீஸ் நிலையப் பதிவு தொடர்பாகப் பொலீஸ் நிலையங்களுடன் சிலர் தொடர்பு கொண்டபோது தமக்கும் தெளிவான விளக்கம் இல்லாதிருப்பதாக அவர்கள் கூறியிருக்கின்றனர்.

இச்சட்டம் தொடர்பான விரிவான சுற்றுநிருபம் விரைவில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

(க)

## அரியாலையில் ஒரே இரவில் 3கடைகள் உடைப்பு

வலி.வடக்கு, ஜூலை 9

அரியாலைப் பகுதியில் இரவில் மூன்று கடைகள் உடைக்கப்பட்டபோதும் ஊர்மக்களின் கண்காணிப்புக் காரணமாகத் திருட்டுக்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டு முயற்சிகள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றன.

எனினும் திருடர்கள் பொது மக்களிடம் சிக்காமல் தப்பிச் சென்றுவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(க-86)

தற்கொலை அறிவிப்பு விடுத்திருந்த

# மலையக இளைஞர் நால்வரும் கண்டிமேல்நீதிமன்றால் விடுதலை

கொழும்பு, ஜூலை 9

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு மலையகத் தமிழ் இளைஞர்கள் கடந்த 3 ஆம் திகதி கண்டிமேல் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கப் போதிய சாட்சிகள் இல்லை என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து நீதிபதி நால்வரையும் விடுதலை செய்தார்.

எஸ். லோகநாதன், எஸ். பெனடிக், பி. சந்திரன், எஸ். உதயகுமார் ஆகிய நான்கு இளைஞர்களுமே விடுதலை செய்யப்பட்டவர்கள் ஆவர்.

குற்றங்கள் ஏதும் புரியாத தங்களை படையினர் சித்திரவதை செய்து பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி பல வருடங்களாகக் களுத்துறைச் சிறையில் தடுத்து வைத்துள்ளனர் என்றும் —

எமது விடுதலைக்கு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் நாம் சிறைச்சாலையிலேயே தற்கொலை செய்வோம் என்றும் இந்த இளைஞர்கள் அறிவித்திருந்தனர்.

இதனையடுத்துச் சட்டத்தரணியும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அ. விநாயகமூர்த்தி கண்டி மேல் நீதிமன்றில் இந்த இளைஞர்கள் சார்பில் ஆஜராகி இவர்களிடம் இருந்து பெறப்பட்ட வாக்குமூலங்கள் சித்திரவதை செய்தே பெறப்பட்டுள்ளதால் இவை சட்டவலுவற்றவை என்று கூறி வாதாடினார்.

இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களை நிராகரித்து அவர்களை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

(க-6)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில்

# நன்னீர்க் கிணறுகள் பல உவர் நீராக மாறிவரும் நிலை கண்டுபிடிப்பு!

## கடும் வரட்சி, அதிக நீரிறைப்பு போன்றவையே காரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ். மாநகரசபை எல்லைக்குள் உள்ள நன்னீர்க்கிணறுகள் உவர் நீராக மாறிவருவதாக யாழ். மாநகரசபை ஜேர்மன் தொழில்நுட்பப் பிரிவு குடிநீர் விநியோகத் திட்டப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

சுண்டுக்குளி, நாயன்மார் கட்டுப் பகுதிகளில் அண்மைக் காலமாக இவ்வாறு நன்னீர்க் கிணறுகள் உவர் நீராக மாறி வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறைவான மழைவீழ்ச்சி, கடும்வரட்சி மற்றும் நீரிறைக்கும் இயந்திரம் மூலம் கூடுதலான நீரை இறைத்தல் போன்ற சிலகாரணங்களினாலேயே நன்னீர்க் கிணறுகள் உவர் நீராக மாறுவதாகவும் அவ்வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

யாழ். மாநகரசபை எல்லைக்குள் மட்டுமல்ல குடாநாட்டின் பல பாகங்களிலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நயினாதீவு, புங்குடுதீவுப் பகுதிகளில் ஜேர்மன்தொழில்நுட்ப நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட குடிதண்ணீர் விநியோகத்திட்டம்அங்குள்ள நன்னீர்க்கிணறுகள் உவர் நீராக மாறியதனால் நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை – நாயன்மார் கட்டுப்பகுதியில் இருந்து குடிதண்ணீர் பெறப்பட்ட கிணறு உவர்நீராக மாறியுள்ளதால் அப்பகுதிக்கு மாநகரசபை வளவில் இருந்து குடிதண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

(க-5)

# மணவாளனாக நின்ற கணவரை தேடிச் சென்று தாக்கிய மனைவி!

## அடியை பார்த்த 'மணப்பெண்' ஓட்டம்

நான்கு பிள்ளைகளையும் தன்னையும் தவிக்க விட்டு விட்டு கணவர் இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்வதற்காக அழைத்துச் சென்றதை அறிந்து அங்கு சென்ற மனைவி மணக்கோலத்தில் இருந்த கணவனைக் கொட்டனால் ஆவேசத்துடன் தாக்கினார்.

பருத்தித்துறை வெளிச்சக் கூட்டுப் பகுதியில் அண்மையில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

தலை, கால் ஆகிய பகுதிகளில் காயங்களுக்கு இலக்கான மணமகன் தற்போது ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மணமகன் மீது மனைவி ஆவேசத்துடன் நடத்திய கொட்டன் அடிகளைக் கண்ட மணமகள் அங்கிருந்து தலை தெறிக்க ஓட்டம் பிடித்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

( க – 117 )

## விநாயகர் சிலை பிரதிஷ்டை

யாழ்ப்பாணம், ஜூலை 9

தொல்புரம் பத்தானையம்பதி ஸ்ரீஞானவைரவர் சுவாமி ஆலயத்தில் புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம்இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

தமிழ்நாட்டிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ள இந்த விநாயகர் சிலை நேற்று மடத்துப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து தொல்புரம் டச்சு வீதியூடாக ஆலயத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

கும்பாபிஷேக நிகழ்வில் வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன், வடபிராந்திய இந்துப் பேரவையைச் சேர்ந்த ப.சிவலோகநாதன் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்துவர்.

(க-7)

# பிரதேச செயலர்பிரிவுகள்ரீதியாக குடாநாட்டில் சாகித்திய விழா

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பிரதேச மட்டத்திலான சாகித்திய விழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடக்கு, கிழக்கு கல்வி பண்பாட்டலுவல் அமைச்சு வடக்கு, கிழக்கிலுள்ள சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் சாகித்திய விழாவை நடத்தும்படி சுற்று நிருபம் அனுப்பி வைத்துள்ளது.

இச்சுற்று நிருபத்திற்கு அமைய மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி. ப. வேலாயுதம்பிள்ளை தலைமையில் கூடிய மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான கலாசாரப் பேரவை சாகித்திய விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இவ்விழாவை யொட்டி பாடசாலை, தனி மட்டங்களில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கவிதை, சிறுகதை, நாடகம், நாட்டுக் கூத்து ஆகியவற்றில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பிரதேச மட்டத்தில் முதலாமிடத்தைப் பெறுகின்ற நிகழ்ச்சிகள் மாவட்ட மட்டத்திலும், மாவட்ட மட்டத்தில் வெற்றியீட்டும் நிகழ்ச்சிகள் மாகாண மட்டத்திலும், மாகாண மட்டத்தில் வெற்றியீட்டும் நிகழ்ச்சிகள் தேசிய மட்டத்திலும் போட்டிகளில் கலந்து கொள்ள முடியும்.

(க-182)

## கருத்தரங்கு

தேனீ வளர்ப்பு சம்பந்தமான கருத்தரங்கு குடத்தனையில் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

தேனீ வளர்ப்பில் அக்கறை காட்டி எம்முயற்சியில் ஈடுபட விரும்புபவர்களுக்கு 600ரூபாவுக்கு தேனீ வளர்ப்புப்பெட்டிகளை வழங்க முடியும் என விவசாயப் போதனாசிரியர் சி. சிவராசா தெரிவித்தார்.


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 20 | 09 |
| 05 | 07 |
| 1950 | 1995 |

**திருமதி கமலநாதன் சாவித்திரி**
(பேபி)

அன்பு அம்மா! ஆறுபோல் ஆண்டுகள் அலைபுரண்டு ஓடினாலும் தினமும் உங்கள் நினைவுடன்தான் நாம் வாழ்கின்றோம். உங்களின் கனி அத்தை (கணேசலிங்கம் கமலாதேவி) மற்றும் உங்களுடன் இறைவன் பாதம் சேர்ந்த சகல ஆன்மாக்களையும் மனதில் நினைந்து பிரார்த்திக்கின்றோம்.

அன்புக்குஞ்சுகள், கணவன்.

நவாலி கிழக்கு,
மானிப்பாய். (89852)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 | 04 |
| 03 | 07 |
| 1961 | 1996 |

அமரர்

**சண்முகராஜா உதயகுமார்**

திதி:- 09-07-2001 சதுர்த்தி

அமரரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் வாடும்
தந்தை, தாய், சகோதரன், சகோதரி, மைத்துனன்.

இல. 75, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (89847)

உதயன்

## சர்ச்சைக்குரிய சட்ட வியாக்கியானம்

1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்கப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை வெறும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதியால் தடைசெய்ய முடியாது. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் ஒரு சட்டத் திருத்தத்தின் மூலமே அதனைச் செய்யமுடியும்.

எனவே புலிகளைத் தடை செய்வதாக ஜனாதிபதி இப்போது விடுத்திருக்கும் அறிவிப்பு சட்ட ரீதியான வலுவற்றது.

- இப்படி நிலைமையைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான அ. விநாயகமூர்த்தி.

பலரால் மதிக்கப்படும் சட்ட அறிஞரும், முன்னாள் சொலிஸிட்டர் ஜெனரலும், உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசருமான கே.எம்.எம்.பி.குலதுங்கவும் இத்தகைய உண்மை நிலையைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

உயர்நீதிமன்ற நீதியரசர் என்ற முறையில் மட்டுமல்லாமல், தற்போது ஜனாதிபதியால் தவறான முறையில் கையாளப்பட்டிருப்பதாகக் கூறப்படும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்டு, நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டபோது சட்டமா அதிபர் திணைக்களத்தில் முக்கிய பொறுப்பில் இருந்தவர் என்ற முறையிலும் இந்தச் சட்டம் குறித்து உரிய விளக்கம் தரப் பொருத்தமானவர் நீதியரசர் குலதுங்க.

இந்தச் சட்டத்துக்கான மூலத்தை சட்டவரைஞர் திணைக்களம் தயாரித்திருந்தபோதிலும், அந்த நடவடிக்கையில் பங்களித்தவர்களுள் கே.எம்.எம்.பி.குலதுங்கவும் ஒருவர். எனவே அவரது கருத்து கவனத்தில் எடுக்கப்படவேண்டியது.

சட்டத்தைக் கையிலெடுத்துத் தமக்கு ஏற்ற முறையில் வியாக்கியானம் செய்து நடவடிக்கைகளை மேற்கொள்வதில் நமது ஜனாதிபதி இணையில்லாதவர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த இரு மாகாண சபைகளை சட்ட முரணற்ற முறையில் கலைத்ததற்காக நீதிமன்றத்தினால் திருத்தப்பட்டவர் அவர்.

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களைச் சட்ட முறையற்ற விதத்தில் பயன்படுத்தி தகுதி வாய்ந்த (?) அதிகாரி ஒருவரை நியமித்து, அவர் மூலம் 'உதயன்' உட்பட மூன்று பத்திரிகைகளை சந்திரிகா அம்மையார் 'சீல்' செய்து 45 நாள்கள் மூடிவைத்திருந்ததும் -

அந்த நியமனமே செல்லுபடியற்றது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்ததால் அந்த நியமனத்தின் கீழ் பதவியேற்றவரினால் பத்திரிகைகளுக்கு வைக்கப்பட்ட 'சீல்' செல்லுபடியற்றதாகிப்போனதும் -

வாசகர்களுக்கு நன்கு நினைவிருக்கலாம்.

கடந்த வருடம் மே மாதத்தில் வடக்கு யுத்தமுனையில் ஏற்பட்ட தோல்விகள் மற்றும் நெருக்கடிகளை மூடி மறைப்பதற்காக தனக்கு சார்புடைய சில சக்திகளுடன் சேர்ந்து, உண்மையை எடுத்தியம்பும் பத்திரிகைகளின் வாயை மூடுவதற்கு சட்ட முரணான வகையில் நடவடிக்கை எடுத்த ஜனாதிபதி குமாரதுங்க, -

இப்போது, தென்னிலங்கையில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடிகளை மூடி மறைப்பதற்காக, ஆட்சிக்கு வரும் முயற்சியில் இருக்கும் எதிர்க்கட்சிகளின் வாயை மூடுவதற்கு, சட்ட முரணான வகையில் அமைந்த நடவடிக்கைகளை நாடுகின்றார்.

கடந்த வருடம், தகுதி வாய்ந்த அதிகாரியின் நியமனம் தவறானது என்பதை அம்பலப்படுத்த பத்திரிகைகள் உயர்நீதிமன்றம் சென்றன.

இப்போது புலிகளைத் தடை செய்யும் பிரகடனத்தை வெளியிடுவதற்கு ஜனாதிபதி நாடிய சட்டப் பிரமாணம் தவறானது என்பதை உறுதிப்படுத்தி மீண்டும் நீதிமன்றம் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழர்களின் பிரதிநிதிகள் தாங்கள் என்று கூறிக்கொள்வதற்கு கறுப்புச் சட்டையை ஒரு 'பிளஸ் பொயின்ற்' ஆகக் காட்டும் சட்டத்தரணிகள் இந்தப் பொறுப்பை ஏற்பார்களா?

---

தென்பகுதியில் கிராக்கி நிலவுவதால்

# பனம் உற்பத்திப் பொருள்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை

## பனை அபிவிருத்திச் சபை ஏற்பாடு

யாழ். குடாநாட்டிலிருந்து பனம் பொருள் உற்பத்திப் பொருள்களை அதிக அளவில் கொள்வனவு செய்வதற்கு பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பனம் பொருள் உற்பத்திகள் எதுவாக இருந்தாலும் எந்த அளவில் இருந்தாலும் அவற்றைக் கொள்வனவு செய்வதன் மூலம் பனம் பொருள் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காகவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பனம் பொருள் உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் தமது உற்பத்தியை அதிகரிப்பதற்கு வசதியாக கடனுதவியை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டின் பனம் பொருள் உற்பத்திகளுக்கு தென்பகுதியில் அதிக சந்தை வாய்ப்பு உள்ளதால் மேற்படி நடவடிக்கையை பனை அபிவிருத்திச் சபை இவ்வாண்டு மேற்கொள்ளவிருக்கிறது. (க-99)

## சனசமூக நிலையத்தின் கண்ணாடிகள் விஷமிகளால் உடைப்பு!

ஈவினை மத்தி கற்பக விநாயகர் சனசமூக நிலைய ஜன்னல் கண்ணாடிகள் கடந்த வியாழன் இரவு விஷமிகளால் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. இதனால் சுமார் 10ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. வீடுகளுக்கு முன்பக்கம் (விறாந்தையில்) எரியும் 'பல்பு'களையும் மற்றும் ஓடுகளையும் கல்லால் எறிந்து சேதப்படுத்தும் நடவடிக்கைகளிலும் இந்த விஷமிகள் ஈடுபட்டு வருவதாக பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## நாட்டு நடப்பு

குருக்கள்மார் ஒன்று கூடி
கோட்டடியில் பெரிய கூட்டம்
பெருத்த காரில் டிரஸ்டிக் 'காரர்'
பெருமெடுப்பில் வந்து சேர்ந்தார்
திருவிளக்கு, திருவாசி, செம்பு, குடை
தெருக்கரையில் பறித்திருக்கு
குருக்களுக்கோ டிரஸ்டிக்கோ
'ஐயனார்' சொந்தமென்று
உருப்படியாய் தீர்ப்பெழுதி
உயர் கோட்டால் வந்திருக்காம்.

- விகடகவி -

# வன்னிப் பகுதிக்குச் செல்ல இனிமேல் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை

வவுனியா,ஜூலை9

வவுனியா மற்றும் ஏனைய மாவட்டங்களில் இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்துக்குச் செல்வோர் இனிமேல் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்ற பின்பே அங்கு செல்ல அனுமதிக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் வன்னிப் பகுதிக்குச் செல்வோர் வன்னி மாவட்ட இராணுவத் தலைமையகத்தினால் வழங்கப்படும் அனுமதியுடனேயே பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை முதல் இந்தப் புதிய ஒழுங்குமுறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக வவுனியாச் செய்திகள் தெரிவித்துள்ளன.

புதிய ஒழுங்குமுறையின் படி வவுனியாவில் இருந்து வன்னிக்குச் செல்ல அனுமதி கோரி விண்ணப்பிப்போரின் விண்ணப்பப்படிவங்கள் இனிமேல் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன என்றும் -

பின்னர் அங்கிருந்து பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்கப்பெற்றதும் பயணம் செய்ய பொது மக்கள் அனுமதிக்கப்படுவர் என்றும்-

வவுனியாவில் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

இந்தப் புதிய நடைமுறை உடனடியாகக் கைவிடப்படவேண்டும் என வன்னி மாவட்ட எம்.பி. செல்வம் அடைக்கலநாதன், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (க-7)

# யாழ்.மாநகர 80வீத இடங்களுக்கு தற்போது குடிதண்ணீர் விநியோகம்

## வீண்விரயத்தைத் தவிர்க்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூலை9

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் 80வீதமான இடங்களுக்கு குழாய் நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று குழாய் நீர் விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன பொறியியலாளர் வே.நவரட்ணராஜா உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்.மாநகர எல்லைக்குள் இருக்கும் உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் மக்கள் மீளக் குடியமராத இடங்களைத் தவிர்த்து அனைத்து இடங்களுக்கும் இந்தத் தண்ணீர் விநியோகம் இடம்பெற்று வருகிறது.

ஒரு குடும்பத்திற்கு நாள் ஒன்றுக்கு 30 கலன் குடிதண்ணீர் வீதம் தற்பொழுது விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு விநியோகிக்கப்படும் தண்ணீரை சிலர் வீண் விரயம் செய்வதாகக் புகார் செய்யப்பட்டுள்ளது.

தண்ணீர் வீண்விரயம் செய்யப்படுவதால் திருநெல்வேலி, கோண்டாவில் பகுதிகளிலிருந்து தண்ணீர் இறைக்கும் நிலையங்களில் இருந்து கூடுதலான நீரைப் பெறவேண்டிய நிலை ஏற்படுகிறது.

கூடுதலான தண்ணீரை நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலம் வெளியே எடுப்பதால் நன்னீர் உவர்நீராக மாறும் நிலை ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலை நீடிக்குமானால் யாழ்ப்பாணத்தில் குடிதண்ணீர் பெறுவதற்கு பெரும் சிரமப்பட வேண்டிய நிலை ஏற்படும்.

### நீர் விநியோக நேரம் குறைக்கப்படும்

மாநகர சபை எல்லைக்குள் குடிதண்ணீரை மக்கள் வீண்விரயம் செய்வதனால் காலை, மாலை நேரங்களில் வழங்கப்படும் நீர் விநியோக நேரம் குறைக்கப்படவுள்ளது.

எனவே குடிதண்ணீர் பெற்றுக் கொள்ளும் மக்கள் இந்த விநியோக நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

தற்பொழுது எதுவித கட்டணமும் இன்றி நடைபெறும் குடிதண்ணீர் விநியோகத்திற்கு விரைவில் கட்டணம் அறவிடப்படும்

நாளொன்றுக்கு ஒரு குடும்பத்திடம் இருந்து ஒரு ரூபா வீதம் அறவிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார். (க-5)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை9

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு அதிபர் தி.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (க-7)

பிரதம நீதியரசருக்கு எதிராகப் பிரேரணை:

# நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிப்பதில் புதிய பிரச்சினை!

கொழும்பு,ஜூலை9

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையை விசாரிப்பதற்கு நியமிக்கப்படவுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அடங்கவுள்ள பிரதிநிதிகள் தொடர்பாகப் புதிய பிரச்சினை ஒன்று உருவாகியுள்ளது.

9 உறுப்பினர்களைக் கொண்ட இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் 5 உறுப்பினர்கள் அரசின் தரப்பிலும் 4 உறுப்பினர்கள் எதிர்க்கட்சிகளின் தரப்பிலும் நியமிக்கப்படவேண்டும் என அரசு முன்னர் தெரிவித்திருந்தது.

இருப்பினும் முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த மாதம் 20ஆம் திகதி எதிர்க்கட்சி ஆசனங்களுக்குச் சென்றுள்ளதால் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளே பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுள்ளன.

எனவே நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் எதிர்க்கட்சி உறுப்பினர்களே பெரும்பான்மையினராக இருக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சபாநாயகர் எடுக்கவுள்ள முடிவை எதிர்க்கட்சிகள் எதிர்பார்ப்பதாக ஐ.தே.கட்சிப் பேச்சாளர் கலாநிதி கருணசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். (க)

வலிகாமம் மேற்குப் பகுதிக் கடைகளில்

# காலாவதியான பொருள் விற்பனையை தடுப்பதற்கான நடவடிக்கை தீவிரம்

மூளாய்,ஜூலை9

வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் காலாவதியான உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் விற்கப்படுவதைத் தடுக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பாவனைக் காலம் முடிவடைந்த பொருள்கள் இப்பகுதியில் சில வர்த்தக நிலையங்களில் விற்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து வலி.மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு கிராம உத்தியோகத்தரும் தத்தமது பிரிவுகளில் மனித பாவனைக்கு உதவாத பொருள்கள் விற்கப்படுவதைத் தடுக்கும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் -

சுகாதாரப் பிரிவு அதிகாரிகளை இது தொடர்பான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும் படியும் -

பிரதேச செயலர் பணிப்புரை விடுத்துள்ளார். (க-ஒ-99)

## நாளை

ஆனி 26
செவ்வாய்க்கிழமை
திதி: பஞ்சமி
வைகறை 5.36 வரை.
நட்சத்திரம் : சதயம்
முன்னிரவு 8.21 வரை.
சுபநேரம் : 10.28 - 11.58
ராகுகாலம் : 2.58 - 4.28
(பழைய நேரப்படி)

## உதயனுக்கு

ஏதாவது ஓர் இலட்சியத்தை மனிதன் ஏற்றுக்கொண்டாக வேண்டும். இல்லையேல் அவன் வாழ்க்கை, ஒரு சோக நாடகமாக - தோல்விக் கதையாக இருக்கும்.

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



# பல்கலை ஊழியர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜுலை9

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவனும் முன்னாள் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியச் செயலாளருமான இதிவ்வியனின் கைது தொடர்பாக ஆராய்வதற்கு இன்று காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக பிரதான வளாக முன்றிலில் பல்கலைக் கழக ஊழியர் சங்கம் விசேட கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

பல்கலைக்கழ ஊழியர் சங்க அங்கத்தவர்களைத் தவறாது இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் சி.கலாராஜ் அறிவித்துள்ளார்.

(ம-6)


Baraka®

ஆரோக்கிய வாழ்வின் உற்ற நண்பன்

பராகா

கருஞ்சீரக எண்ணெய்
கருஞ்சீரக குளிசை

ஆயுள்வேத திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றது.

நாடு முழுவதிலும் உள்ள எல்லா பார்மஸிகளிலும் கிடைக்கிறது.



நீங்கள் நீரிழிவு நோயால் அவதிப்படுபவரா?
அல்லது உடம்பில் அதிக கொலஸ்ரோல் இருப்பதால் கவலைப்படுகிறீர்களா?
கவலை வேண்டாம்....
பராகாவைப் பாவித்துப் பயனடையுங்கள்.

EXPOLANKA COMMODITIES (PVT) LTD.
*No.11A, Mile Post Avenue, Colombo - 3, SriLanka.*

Distributor in Jaffna,
SIVA NARUMANAB POONGA
No: 288, Hospital Road,
Jaffna. Tel: 021 - 2567

*Fax : 676546*
*E-Mail : expocom@sri.lanka.net*
*Web site : www.barakaoil.com*

(C/17330)


# அரும்பொருள்கள் சேகரிக்கும் பணி மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜுலை9

புராதன அரும்பொருள்களைச் சேகரிக்கும் பணிகள் வலிகாமம் மேற்குப் பகுதியில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

வலி.மேற்குப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் மூலமாக இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்படி பிரதேசத்தின் வரலாற்றுத் தொன்மை மற்றும் சிறப்புக்களை ஆதாரங்களுடன் ஆவணப்படுத்தும் வகையில் ஏற்கனவே பல அரும் பொருள்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த முயற்சியின் இரண்டாவது கட்டமாகவே மீண்டும் அரும்பொருள்களைச் சேகரிக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இந்தப் பணியில், தம்மிடம் இருக்கும் அரும் பொருள்களைத் தந்துதவவிரும்புவர்கள் வலி. மேற்கு பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (க-ஒ-99)

# மூளாய் - பொன்னாலை வீதியைப் புனரமைக்க நடவடிக்கை

மூளாய்க்கும் பொன்னாலைக்கும் இடையேயான பிரதான வீதி திருத்தம் செய்யப்படவுள்ளது.

நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யப்படாமல் சேதமடைந்த நிலையில் காணப்படும் மேற்படி வீதியைப் புனரமைப்புச் செய்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு ஏற்கனவே செய்யப்பட்டுள்ளது.

திருத்த வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (க-99)

# தேர்தல் ஆணையாளருக்கு ஜனாதிபதி கடிதம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியாகத் தானே இருப்பதால் கட்சி தொடர்பான சகல செயற்பாடுகளும் தனது கண்காணிப்பின் கீழேயே நடைபெறவேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தி, தேர்தல் ஆணையாளருக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருப்பதாக அறியவந்தது.

கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவுக்கும் ஜனாதிபதி குமாரதுங்கவுக்கும் இடையில் பெரும் கருத்து வேறுபாடு நிலவுவதாகச் செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ள இவ்வேளையில் -

பொதுச் செயலாளர் என்ற பதவியைப் பயன்படுத்தி, கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் கணிசமான எண்ணிக்கையானோரை தன்னிடமிருந்து தனிக் கட்சியாக அல்லது தனிக் குழுவாக எஸ். பி.திஸாநாயக்க இலகுவாகப் பிரித்து எடுத்துச சென்றுவிடுவார் என ஜனாதிபதி சந்தேகப்படுவதாலேயே இத்தகைய கடிதம் ஒன்றை அவர் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைத்திருக்கக் கூடும் - என்று கருதப்படுகின்றது. (உ)

# 5ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



ஆண்டவன் படைப்பில்
10
-
02
-
1933

அறியாய அழிப்பில்
04
-
07
-
1996

## அமரர் வல்லிபுரம் இராசரத்தினம்

*(ஓய்வு பெற்ற O.L.D.O ஓவசியர்)*

திதி:- 09-07-2001

வீரவாகு தேவர் மரபிலே தோன்றினீர்கள்
வியத்தகு சேவை புரிந்தே உயர்ந்தீர்கள்
ஊரறிய இல்லறத்தை உவந்தே ஏற்றீர்கள்!
உத்தம திலகமாய் சிறந்தே வாழ்ந்தீர்கள்
செங்குந்த குல திலகராய் சீரறம் வகுத்தீர்கள்
செந்தமிழர் பதியெங்கும் மங்கலங்கள் சேர்த்தீர்கள்!

**வந்தனங்கள் செய்தே தினம் வாழ்வோமிங்கு**
**வாஞ்சையுடன் உங்களை எண்ணி வாழ்வோமிங்கு!**

தகவல்:-
A.P.றஞ்சன் (மருமகன்)
*கெனடி லேன்,*
*இராமலிங்கம் றோட்,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

*உங்கள் நினைவின் நிழலில்*
*இளைப்பாறும்:*
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(89779)


# SRI LANKAN ENTREPRENEUR OF THE YEAR 2000

## NOW ON!

❖ 6TH CONSECUTIVE YEAR
❖ SRI LANKA'S HIGHEST NATIONAL HONOUR TO LOCAL ENTREPRENEURS
❖ RECOGNIZED & REWARDS SRI LANKAN ENTREPRENEURS FOR OUTSTANDING ENTREPRENEURIAL ACHIEVEMENTS
❖ PROGRAMME OPEN TO MICRO, SMALL, MEDIUM, LARGE & EXTRA LARGE BUSINESS OPERATIONS IN INDUSTRY AGRICULTURE & SERVICE SECTORS
❖ PROVINCIAL & NATIONAL LEVEL RECOGNITION
❖ OPPORTUNITIES TO PROMOTE ENTERPRISES PRODUCTS & SERVICES LOCALLY & INTERNATIONALLY
❖ PLATINUM, GOLD, SILVER & BRONZE TROPHIES ON OFFER.
❖ 279 PROVINCIAL & 33 NATIONAL AWARDS TO BE WON

APPLICATIONS ARE NOW AVAILABLE AT
FCCISL SECRETARIAT, LEVEL 3, 53, VAUXHALL LANE, COLOMBO 02.
TEL : 304253 - 4 FAX : 304255
&
CHAMBER OF COMMERCE & INDUSTRIES OF YARLPANAM
866, POINT PEDRO ROAD, NALLUR JAFFNA. TEL/FAX: 2849
CLOSING DATE 31ST JULY, 2001

(89856)

## APPLY NOW!


# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
04
-
12
-
1949

மறைவு
09
-
07
-
1995

## திருமதி கமலாதேவி கணேசலிங்கம்

ஆண்டுகள் ஆறு சென்றாலும்
எம் நினைவில் என்றும் நீங்காது
நிலைத்து நிற்கும் எங்கள் குலவிளக்கே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

*நவாலி கிழக்கு,*
*மானிப்பாய்.*

-குடும்பத்தினர்.

(89709)

# ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
10
-
02
-
1931

ஆண்டவன் அடியில்
21
-
06
-
2000

## திருமதி கந்தசாமி சந்திரக்கண்டு

திதி:- 10-07-2001


பாசத்தின் சுமையோடு கணப் பொழுதில் மறைந்த
எங்கள் அன்புத் தாயே! வருடம் ஒன்று மறைந்தாலும்
உங்களை மறக்க முடியவில்லை!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

*பிரிவால் துயருறும்*
மகள்:- யோ.பாலேந்திரராணி (பாலா)
மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் மக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*தெணியம்பை,*
*வல்வெட்டித்துறை.*

(89758)

# முதலாம் வருட நினைவஞ்சலி



தோற்றம்
03
-
06
-
1953

மறைவு
20
-
06
-
2000

## அமரர் கந்தையா கருணானந்தன்

திதி:- சங்கஹடஹர சதுர்த்தி

தெய்வத்துள் தெய்வமான எம்
தெய்வீகக் குலவிளக்கே!
நாம் தேடித் தவிப்பது
தெரியவில்லையா உங்களுக்கு?
பாசச் சுமையோடு வாழ்ந்த எம் அப்பாவே!
எமைப் பாதி வழியில் பரிதவிக்க விட்டுச் சென்றதேனோ?
அப்பா வருவாரென வாசலை தினம் பார்த்திருக்கும்
எம் இனிய செல்வங்களை எப்படி வளர்த்திடுவேன்?
கோடி தவமிருந்தாலும் தேட முடியாதப்பா
உங்களைப் போல் தெய்வமொன்றை!
ஏனிந்தக் கதியெமக்கு?
எப்படித் தாங்கிடுவோம்?
கண்ணீருடன் காலத்தைப் போக்கிடும்

*'சிவபதி'*
*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.*

மனைவி, சசிகரன், றஜீவ்கரன்,
தனுஷியா குடும்பத்தினர்.

(89851)

# ஆசிரியர் தொடருறு கல்விச் செயற்பாடு குடாநாட்டில் வேகம் பெறவேண்டும்

இலங்கையில் புதிய கல்விச் சீர்திருத்தம் ஆசிரியர் தர மேம்பாட்டுக்கு உதவும் நோக்குடன் ஒழுங்கு செய்யப்பட்ட செயலொழுங்கில் இரண்டு அம்சங்கள் முக்கியம் பெறுகின்றன.

1. ஆசிரியர்களுக்கு வேண்டிய சேவை முன் பயிற்சியினை வழங்குவது.

2. ஆசிரியர்களுக்கான மீள் பயிற்சியளிக்கும் நோக்கில் தொடருறு கல்வி வழங்குவது.

இவற்றுள் முன்னையது தேசிய கல்விக் கல்லூரிகள் மூலம் சிறப்பான முறையில் வழங்கப்பட்டு வருகின்றது.

பின்னையது - 1) ஆசிரியர் மையங்கள் (Teacher Centres)
2) ஆசிரிய நிறுவனங்கள் (Teacher Institutes) ஆகியவை மூலம் வழங்கப்படுகின்றது.

தொடருறு கல்விச் செயற்பாட்டின் மூலம் ஆசிரியர்கள் வாண்மை விருத்தி மேம்பாட்டினை தோற்றுவித்து வகுப்பறைக் கற்பித்தலில் பயனுறுதிமிக்க பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் 84 ஆசிரிய மையங்களும் (T.C.) 3 ஆசிரிய கல்வி நிறுவனங்களும் (TEI) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவை தேசிய ஆசிரிய கல்வி அதிகாரசபை, கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விக்கிளை, தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றின் வழிகாட்டலுடனும் ஆதரவுடனும் செயற்பட்டு வருகின்றன. அருகிலுள்ள தேசிய கல்விக் கல்லூரிகளுடன் இணைப்புப் பெற்றவையாக ஆசிரிய மையங்கள் உள்ளன. தேசிய கல்விக் கல்லூரிகள் தாம் வழங்கும் ஆசிரிய சேவை முன் பயிற்சி செயற்பாட்டுக்குப் புறம்பாக தொடருறு கல்விச் செயற்பாட்டிலும் பங்குகொண்டு கருமமாற்ற வேண்டிய கடமைக் கூறுகளையும் கொண்டுள்ளன. இச் செயற்பாட்டினைக் கொண்டு நடத்துவதற்காக தேசிய கல்விக் கல்லூரிகளில் தொடருறு கல்விக்கென ஓர் உப பீடாதிபதி நியமனம் பெற்றுள்ளார். அவர் ஆசிரிய மையங்களில் தொடருறு கல்வி வழங்குவதற்கு ஒத்தாசை புரிபவராகவும் வேண்டும். வள ஆளணியினை கல்விக் கல்லூரிகளிலிருந்தும் அதற்குப்புறம்பாகவும் ஏற்பாடு செய்து கொடுப்பவராகவும் செயற்படுவார்.

ஆசிரிய மையங்கள் குறுங்கால ஆசிரிய பயிற்சியினையும் ஆசிரிய கல்வி நிறுவனங்கள் நீண்டகால வதிவிடப் பயிற்சியினையும் வழங்குவனவாக ஏற்பாடாகியுள்ளன. இவற்றுக்குப் புறம்பாக விசேட கல்வித் தேவைகளுக்கமைய தொடருறு கல்வி வழங்குவதற்கு ஆசிரிய மையங்களுடன் இணைந்து கல்விக் கல்லூரிகளும் வதிவிடப் பயிற்சித் திட்டத்தினை ஏற்பாடு செய்யக் கூடிய வழிவகைகளும் உள்ளன.

ஆசிரிய மையங்களுக்குப் பொறுப்பாக ஒரு முகாமையாளர் (Manager) கடமையாற்றுவார். அவர் கல்விக் கல்லூரிப் பீடாதிபதியுடன் இணைந்து இத்திட்டத்தினை ஏற்பாடு செய்து கொள்ளலாம். கல்லூரி விடுமுறைத் தினங்களில் வதிவிடப் பயிற்சித் திட்டத்தினை ஒழுங்கு செய்து கொள்ளமுடியும்.

யாழ்ப்பாணத்தில் தற்போது 3 ஆசிரிய மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. அவை அமைந்துள்ள இடங்கள்

1. நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

2. வரணி மகாவித்தியாலயம் (தற்போது நெல்லியடியில் இயங்குகின்றது)

3. மானிப்பாய் இந்துக் கல்லூரி

வெகுவிரைவில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் ஒன்றும், தீவுப்பகுதியில் இன்னொன்றும் நிறுவப்படவுள்ளன.

இவை நிறுவப்பட்டதும் யாழ். குடாநாட்டின் 5 வலயங்களிலும் தலா ஒவ்வொரு ஆசிரிய மையங்கள் நிறுவப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாசிரிய மையங்கள் தனித்து ஆசிரியர்களுக்கு வேண்டிய தொடருறு கல்வியை மட்டும் வழங்கும் நிலையங்களாக அமையாது வேறு பல கல்வி அபிவிருத்திப் பணிகளையும் கொண்டு செயற்படவேண்டியுள்ளதை அவதானத்திற் கொள்ளல்வேண்டும்.

அவையாவன:-

1. அவை கல்வி மூலவள நிலையங்களாகச் செயற்பட வேண்டும்.

2. சிறந்த நூலக வசதி கொண்டிருத்தல் வேண்டும்.

உலக வங்கியின் - TETD Project இதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கின்றது.

3. பாடவழிகாட்டிகள், ஆசிரிய கைந்நூல்கள் ஆகியவற்றைச் சேகரித்து வைத்திருத்தல் வேண்டும்.

4. சகல பாட நூல்களும் இங்கு இருத்தல் வேண்டும்.

5. அரச சுற்றறிக்கைகள் யாவும் இங்கு பாதுகாக்கப்பட வேண்டும்.

6. ஆசிரிய வாண்மை விருத்திக்குவேண்டிய ஆலோசனைகளை வழங்கும் மையமாகத் திகழ வேண்டும்.

7. ஆசிரியர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் நிலையமாகத் தொழிற்பட வேண்டும்.

8. கற்றல், கற்பித்தல் உபகரணங்கள் சேர்த்து வைக்கப்படும் நிலையமாக இருத்தல் வேண்டும்.

9. மாதிரி வகுப்புகள் (Model Classes) நடத்தப்படும் இடமாக இருத்தல் வேண்டும்.

10. ஆசிரியர்களுக்கு ஆங்கில வகுப்புகளை நடத்தும் நிலையமாகவும் அவை தொழிற்பட வேண்டும்.

ஆசிரிய மையங்களின் செயற்பாட்டில் வலயக் கல்விப் பணிமனை, மாகாணக்கல்விப் பணிமனை, தேசிய கல்விக் கல்லூரிகள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு மிக அவசியமெனக் கொள்ளப்படுகிறது. முக்கியமாக ஓர் ஆசிரிய மையத்தின் செயற்பாட்டில் வலயக் கல்விப் பணிமனை முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. அது ஏனைய இரண்டுடனும் இணைப்பை ஏற்படுத்தும் முக்கிய பாகத்தைக் கொண்டுள்ளதையும் கவனத்திற் கொள்ளவேண்டும்.

### ஆசிரிய மையங்களின் இணைப்புக் குழு

பின்வருவோர் இக்குழுவில் உறுப்பினர்கள்:-

1. பிரதம ஆணையாளர் - தேசிய கல்விக் கல்லூரிகள்

2. பணிப்பாளர் - தேசிய கல்வி அதிகார சபையில் தொடருறு கல்விக்குப் பொறுப்பானவர்.

3. பணிப்பாளர்/பிரதம திட்ட அதிகாரி - தேசிய கல்வி நிறுவகத்தில் தொடருறு கல்விக்குப் பொறுப்பானவர்.

4. சகல மாகாணங்களினதும் - ஆசிரிய மையங்களின் இணைப்பாளர்கள்.

இக்குழுவினர் மாதமொருமுறை கூடி செயற்பாடுகளைப் பரிசீலனை செய்துகொள்வர். அத்துடன் எதிர்காலச் செயற்பாடுகள் பற்றியும் கலந்துரையாடிக் கொள்வர். ஆசிரிய மையங்களின் தரமேம்பாட்டுச் செயற்பாடுகளை ஏற்பாடு செய்யும் முக்கிய பொறுப்பு இக்குழுவுக்குரியது.

### ஆசிரிய மையங்களும் மாகாண கல்வித் திணைக்களமும்

ஆசிரிய மையங்களின் செயற்பாட்டில் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பங்கு மிகப் பெரியது. மத்திய அமைச்சில் இயங்கும் தேசிய கல்வி அதிகாரசபை, கல்விக் கல்லூரிகள் கிளை மற்றும் தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றுடன் ஆசிரிய மையங்களுக்குத் தொடர்பை ஏற்படுத்தும் ஓர் இணைப்பு நிலையமாக அது விளங்குகின்றது.

இதற்குப் பொறுப்பாக ஓர் இணைப்பாளர் ஒவ்வொரு மாகாணக் கல்வி அலுவலகத்திலும் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் இலங்கை கல்வி நிர்வாக சேவையிலுள்ள உத்தியோகத்தராக விருப்பார். இவற்றுடன் ஆசிரிய மையங்களை மேற்பார்வையிடல், வழிகாட்டல் மற்றும் வேண்டும் நிதி ஒதுக்கீடு செய்தல் என்பனவும் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பொறுப்பாகும்.

### ஆசிரிய மையங்களின் மாகாண இணைப்பாளரின் கடமைக் கூறுகள்

1. தேசிய கல்வி அதிகாரசபை, தேசிய கல்வி நிறுவகம், மத்திய அமைச்சு, தேசிய கல்விக் கல்லூரிகள், ஆசிரிய மையங்கள், ஆசிரிய நிறுவகங்கள் ஆகியவற்றுடன் தொடர்பை ஏற்படுத்தல்.

2. கல்வி அமைச்சில் நடைபெறும் கூட்டங்களில் கலந்துகொள்ளல்.

3. ஆசிரிய மையங்களின் முகாமைத்துவக் குழு எடுக்கும் தீர்மானங்களை அறிந்திருத்தல், அவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

4. ஆசிரிய மையங்களின் நிகழ்ச்சிகளை மேற்பார்வையிடல், மாகாண மட்டத்தில் மதிப்பிடல்.

5. மாகாண தொடருறு கல்வியின் வருடாந்த நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்.

6. மாகாணத்தில் உள்ள ஆசிரியர்களை ஆசிரிய மையங்களின் விசேட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள அறிவுறுத்தல்.

7. ஆசிரிய மையங்களிலும் உத்தியோகத்தர்களது வாண்மை விருத்திக்குத் தேவையானவற்றை அடையாளங்காணல், அவை நிறைவு காண நடவடிக்கை எடுத்தல்.

8. மாகாணத்தில் உள்ள சகல ஆசிரிய மையங்களையும் சமமாக வளர்ச்சி பெற உதவுதல்.

### ஆசிரிய மையங்களின் முகாமைத்துவம்

ஆசிரிய மையங்களின் முகாமைத்துவத்துக்கு முகாமைத்துவக் குழு ஒன்று பொறுப்பாகவிருக்கும். அதன் தலைவராக வலயக் கல்விப் பணிப்பாளர் கடமை புரிவார். தேசிய அளவிலான தரமேம்பாட்டுக்கும் மேற்பார்வைக்கும் கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விக்கிளையும், தேசிய கல்வி நிறுவகமும் பொறுப்பாகவிருந்து நடைபெறும் செயற்பாடுகளின் தரத்தினை உறுதிசெய்து மதிப்பிட்டுக்கொள்ளும்.

ஒவ்வோர் ஆசிரிய மையங்களும் அருகில் உள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளுடன் இணைப்புப் பெற்றவை. அங்கு நியமிக்கப்பட்டுள்ள தொடருறு கல்விக்கான உப பீடாதிபதி, துறைசார்ந்த நிபுணத்துவம் உடையவர்களை ஆசிரிய மையங்களின் செயற்பாடுகளுக்காக ஒழுங்கு செய்யும் பொறுப்புமிக்கவர்.

## யாழ்ப்பாணத்தில் விரைவில் ஐந்து ஆசிரிய மையங்கள்

### ஆசிரிய மையங்களின் முகாமைத்துவக் குழு

இக்குழுவில் பின்வருவோர் கடமைபுரிவர்:-

1. வலயக் கல்விப் பணிப்பாளர் - தலைவர்

2. ஆசிரிய மைய முகாமையாளர் - செயலர்

3. உதவிக்கல்விப் பணிப்பாளர்/பிரதிக் கல்விப்பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) - அங்கத்தவர்

4. உப பீடாதிபதி (தொடருறு கல்வி) - அங்கத்தவர் தேசிய கல்விக் கல்லூரி

5. ஆசிரிய மையம் அமைந்துள்ள பாடசாலை அதிபர் - அங்கத்தவர்

ஆசிரிய மையங்களின் செயற்பாடுகளுக்கமைய இக்குழு விரிவுபடுத்தப்படக்கூடியது.

### முகாமைத்துவக் குழுவின் கடமைக் கூறுகள

★ குழு மாதமொருமுறை கூடி ஆசிரிய மையங்களின் திட்டங்களைத் தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும்.

★ ஆசிரிய மையங்களில் வருடாந்த வேலைத்திட்டமும், மாதாந்த வேலைத் திட்டமும் இருத்தல் வேண்டும்.

★ இவ்வேலைத் திட்டங்களை அமைக்கும் போது இலங்கை ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பில் தெரிவிக்கப்பட்ட அம்சங்களில் கவனங்கொள்ளல் வேண்டும்.

★ ஆசிரியர்களது வாண்மை விருத்தியினை உறுதி செய்து கொள்ளக் கூடியதாக மீள் பயிற்சி வழங்கல் இங்கு முக்கியமாகின்றது.

அத்துடன் ஆசிரியர்களது எதிர்கால வளர்ச்சிக்கும் பதவி உயர்வுக்கும் உதவக்கூடிய வகையிலும் சிறந்த அறிவினைப் பெற்றுக்கொள்ளக் கூடிய முறையிலும் திட்டமிடப்பட வேண்டும்.

### முகாமைத்துவக் குழு தலைவரின் கடமைக் கூறுகள்

1. ஆசிரிய மையங்களின் மாதாந்த நிகழ்ச்சித் திட்டங்களை அங்கீகரித்தல்.

2. ஆசிரிய மையங்களின் நிகழ்ச்சிகளில் ஆசிரியர்கள் கலந்துகொள்வதை உறுதிசெய்தல், கலந்து கொண்டவர்களுக்குக் கடமை லீவு வழங்கல்.

3. ஆசிரிய மைய முகாமையாளருக்கு உதவி, ஆசிரிய மையங்களின் செயற்பாடுகளை உறுதிமிக்கவையாக்கல்.

4. ஆசிரிய மையங்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்துதவுதல்.

கலாநிதி
திருநாவுக்கரசு கமலநாதன்

5. தனது வலயத்தில் ஆசிரியர்களுக்குத் தேவையான மீள் பயிற்சியின் வகைகளை அடையாளங் கண்டுகொள்ள உதவுதல்.

6. நிதிப் பிரமாணங்களுக்கமைவாக ஆசிரிய மையங்களுக்குத் தேவையான நிதியினை வழங்கல்.

7. ஆசிரிய மீள் பயிற்சிக்குத் தேவையான வள ஆளணியினரைப் பெற உதவுதல்.

### முகாமைத்துவக் குழு செயலரின் கடமைக் கூறுகள்

1. ஆசிரிய மையங்களின் கல்வி சார்ந்த மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாகவிருத்தல்.

2. ஆசிரிய மையங்களின் செயற்பாட்டுக்குரிய நேரங்களில் அது திறந்திருத்தலை உறுதிசெய்தல்.

3. மாதாந்த நிகழ்ச்சித் திட்டத்தை முந்திய மாத 25ஆம் திகதிக்கு முன் தயாரித்தல்.

4. மாதாந்த நிகழ்ச்சித் திட்டத்துக்குரிய அனுமதியை உரிய முறையில் பெறல்.

5. ஆசிரிய மையங்களின் செயற்பாடு தொடர்பான அறிக்கைகளை முறையாகப் பேணுதலும் அத்தகவல்களை உரிய நிறுவனங்களுக்கு வழங்கலும்.

6. திட்டங்கள் தொழிற்படுவதற்கு வேண்டிய வசதிகளை வழங்கல்.

7. மீள் பயிற்சிக்குத் தேவையான துறைகள் பற்றிக் கண்டறிதல்.

8. பின்வரும் நிறுவனங்களுடன் மிக நெருங்கிய தொடர்பு வைத்திருத்தல்.

*1. தேசிய கல்வி அதிகார சபை*
*2. தேசிய கல்வியியற் கல்லூரிகள்*
*3. மாகாணக் கல்விப் பணிமனை*
*4. வலயக் கல்விப் பணிமனை*
*5. ஆசிரிய நிறுவகங்கள்*
*6. பிரதிக் கல்விப் பணிப்பாளர்*
*7. வள நிலையங்கள்*
*8. தனது பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள்*
*9. தனது பிரதேசத்தில் உள்ள ஆசிரியர்கள்*
*10. பிராந்திய ஆங்கில மொழி உதவி மையங்கள் (RELSC)*

9. ஆசிரிய மையங்களை உள்ளும் புறமும் கவர்ச்சியாக வைத்திருத்தல்.

10. ஆசிரிய மையங்களின் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல்.

### பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) கடமைக் கூறுகள்

- முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளல்.
- வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிமனை ஊழியர் ஆகியோருடன் நல்லுறவு கொண்டு ஆசிரிய மையங்களின் பணிகள் உயர்வடைய வசதி செய்துகொடுத்தல்.
- ஆசிரிய மைய முகாமையாளருக்கு நிகழ்ச்சித் திட்டமிட உதவுதல்.
- மாகாண இணைப்பாளர், தேசிய கல்வி அதிகாரசபை, கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விக் கிளை, தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றுடன் கலந்துரையாடி ஆசிரிய மையங்களின் நிகழ்ச்சிகள் ஒழுங்கமைய உதவுதல்.
- ஆசிரிய மையங்களின் செயற்பாடுகளுக்கான பின்னூட்டலை வலய ஆசிரியர்களிடமிருந்து பெறல்.
- ஏனைய கல்வி நிறுவனங்களுடனான இணைப்பினை வலுப்பெற வைத்தல்.

### தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி - (தொடருறு கல்வி) கடமைக் கூறுகள்

- முகாமைத்துவக் குழு கூட்டங்களில் தவறாது கலந்துகொள்ளல்.
- ஆசிரிய மையங்களின் செயற்பாடுகளுக்குத் தேவையான வள ஆளணியினரை வழங்கல்.
- ஆசிரிய மையங்களின் வளவாளராகக் கடமையாற்றல்.
- ஆசிரிய மையங்களின் தரவிருத்திக்கு தேசிய ஆசிரிய கல்வி அதிகார சபை, கல்வி அமைச்சு ஆகியவற்றுக்கு பொறுப்பாண்மையுடையவராகவிருத்தல்.
- ஆசிரிய மையங்களின் ஒவ்வொரு செயற்பாட்டினையும் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதிக்கு அறிவித்தல்.
- ஆசிரிய மையங்கள் இணைந்துள்ள தேசிய கல்விக் கல்லூரிக்கு ஆசிரிய மையங்கள் பற்றிய தகவல்களை வழங்கல்.
- தேசிய கல்விக் கல்லூரிகளுடன் இணைந்த, ஆசிரிய நிலையங்களின் மாதாந்த, வருடாந்த நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரிக்க உதவுதலுடன் அதன் செயற்பாட்டினை அவதானித்தல்.

### ஆசிரிய மையங்கள் அமைந்துள்ள பாடசாலை அதிபர்களது கடமைக்கூறுகள்

- முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளல்.
- ஆசிரிய மையத்தில் செயற்பாட்டுக்குத் தேவையான வளங்களைப் பெறுவதில் உதவுதல்.
- தேவைப்படின் வதிவிட வசதிகளை ஒழுங்கு செய்து தரல்.

ஆசிரிய மையத்தின் வளவாளராகத் தொழிற்படல்.

*(ஆதாரம்:*
*HandBook on Teacher Centres,*
*Teacher Education Division,*
*Ministry of Education.)*

★

---

# சங்கானை அகதி முகாம் மலசலகூடங்கள் நிரம்பி வழிவதால் சூழல் பாதிப்பு

## துர்நாற்றத்தால் மக்கள் அசௌகரியம்

மூளாய்,ஜூலை9

சங்கானையில் உள்ள இடம்பெயர்ந்தோர் தங்கியிருக்கும் நலன்புரி நிலையத்தில் மலசல கூடங்கள் நிரம்பி வழிகின்றன. இதனால் சூழலில் துர்நாற்றம் பரவ ஆரம்பித்துள்ளதால் இடம்பெயர்ந்த மக்கள் அவஸ்தைப்பட்டு வருகின்றனர்.

சங்கானைப் பகுதியில் உள்ள நீதிவான் நலன்புரி நிலையத்தில் உள்ள மலகூடங்களே இவ்வாறு நிரம்பிவழிகின்றன.

இவற்றைத் துப்பரவு செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்துள்ளன.

பல வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட மேற்படி மலகூடங்களைத் துப்புரவு செய்வதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. தற்போதைய நிலையில் மேற்படி நலன்புரி நிலையத்தின் சூழல் மிகவும் மோசமாகப் பாதிப்படையும் ஆபத்து உருவாகியுள்ளது.

(சு-99)

**பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ..சங்கம்**

(வரையறுக்கப்பட்டது)

கணக்காய்வுக் காலம் 01.03.2000-28.02.2001ஆம் ஆண்டுக்கான கிராமிய வங்கி மீதிகளை உறுதிப்படுத்தல்

மேற்படி காலத்துக்கான கணக்காய்வு நடைபெறுவதனால் 10-07-2001இல் இருந்து 16-07-2001இற்கு முன்னர் கிராமிய வங்கி வாடிக்கையாளர்கள் தங்களது மீதிகளை பண்டத்தரிப்பு, மாதகல் கிராமிய வங்கிகளில் உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கணக்காய்வாளர்கள்,
கூட்டுறவுத் திணைக்களம்.

(C/17336)



**நிப்பொன் (NIPPON) மின்விசிறிகள்**

**Nippon Fan Quality Product**

- Box Fans
- Wall Fans
- Orbit Fans
- Table Fans
- Stand Fans
- Ceiling Fans
- Exhaust Fans
- Air Cooling Fans etc.....

ஒரு வருட உத்தரவாதம்

மிகச் சிறந்த தெரிவுகள், 30 வகைகள், 26 நிறங்கள்

**LANKA NIPPON**

No.18, Keyzer St, Colombo-11.Tel:437735.
No.10, Trelawny Place, (Behind Milk Bar), BambalapitiyaJunc,Colombo-04.Tel:589992.

AVAILABLE ISLAND WIDE

நிப்பொன் உத்தரவாதமுள்ள தயாரிப்புக்கள்



எமது பிரதேசத்தை உள்ளடக்கிய வலி.தெற்குப் பிரதேச சபையின் புதிய தலைவராக **திரு.K.கமலசேகரன்** JPUM (பாபு) அவர்களை நியமித்து,



எமது வாழ்வுக்கு ஒளியூட்டிய மாண்புமிகு கௌரவ அமைச்சர் **திரு.K.N.டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கு எமது நன்றியறிதலையும், கடமைப்பாட்டையும் தெரிவிப்பதோடு,

புதிய தலைவர்
**திரு.K.கமலசேகரன்**



அவர்கள் தனது சேவைமூலம் பெருவிருட்சமாக வளர்ந்து, பல்லாயிரக்கணக்கான மக்களின் இருள் சூழ்ந்த வாழ்வுக்கு விடியலைத் தேடித்தர வேண்டுமென இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

*சுன்னாகம் வாழ் மக்கள் சார்பாக,*
தேவராசா ஐங்கரன்.

(89858)



**சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி.**

பதிவு இலக்கம் - யா/1551 - 14.2.71.

**முக்கிய அறிவித்தல்**

எமது சங்க சகல அங்கத்தவர்களுக்கும்
அங்கத்துவ பட்டியல் முடிவுறுத்தல் 31.07.2001.

மேற்படி எமது சங்கத்தின் அனைத்துக் கிளைகளினதும் கிளைக்குழுத் தேர்தல் நடத்துவதற்காக அங்கத்தவர் பட்டியல்கள் 31.07.2001ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்படவுள்ளன.

எனவே ரூபா 100/= பங்கினைக் கொண்டிராத அங்கத்தவர்கள் மீதிப் பணத்தை 31.07.2001ஆம் திகதிக்கு முன்னர் தாங்கள் தற்போது வசிக்கும் இடத்துக்கு அண்மையிலுள்ள எமது தற்காலிக சங்கக் கிளைகளில் அல்லது எமது சங்கத் தலைமைக் காரியாலயத்தில் செலுத்தி, தங்களது பூரண அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

எதிர்வரும் கிளைக்குழுத்தேர்தல் 31-07-2001இல் உள்ள அங்கத்தவர் பட்டியலின் பிரகாரமே நடைபெறும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

இவ்விடயம் தொடர்பாக மேலதிக விவரங்கள் ஏதும் தேவைப்படுமிடத்து தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு விவரம் பெற்றுக்கொள்ளவும்.

செ.சுப்பிரமணியம்
தலைவர்.

சு.சுந்தரலிங்கம்
செயலாளர்.

சங்க தற்காலிக முகவரி:
*திருமகள் சோதி வீதி,*
*நெல்லியடி,*
*கரவெட்டி.*

(C-17332)


## பயணிகள் இளைப்பாற்று மண்டபம்

தென்மராட்சி,ஜூலை9

பருத்தித்துறை நகரசபையினால் பருத்தித்துறை பஸ் நிலையத்தில் 4லட்சத்து 50ஆயிரம் ரூபா செலவில் பயணிகள் இளைப்பாற்று மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் அண்மையில் புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் பெண்டிக்ற் தனபாலசிங்கத்தினால் நடப்பட்டதாக நகர சபை உபதலைவர் நா.மணிவண்ணன் தெரிவித்தார். (க-117)

## கண்காட்சி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை9

பனை அபிவிருத்திச் சபையினால் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் கொழும்பில் நடத்தப்படவிருந்த அகில இலங்கை ரீதியிலான பனம் கைப்பணிப் பொருள் கண்காட்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கண்காட்சி அடுத்த வருடம் ஜனவரி அல்லது பெப்ரவரியில் நடைபெறலாம் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 3ஆம், 4ஆம், 5ஆம் திகதிகளில் நடைபெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த இந்தக் கண்காட்சிக்குரிய ஏற்பாடு குடா நாட்டில் துரிதகதியில் நடைபெற்று வந்தது குறிப்பிடத்தக்கது. (க-4)

## பிரயாணப் பை உங்களுடையதா?

யாழ்ப்பாணம்,ஜூலை9

கடந்த வியாழன்று திருகோணமலையில் இருந்து கப்பல் மூலமாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பயணி ஒருவரால் கைவிடப்பட்ட பிரயாணப் பை ஒன்று இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் வசிக்கும் மகாஜனக் கல்லூரி அதிபரிடம் உள்ளது என்றும் -

சம்பந்தப்பட்டவர்கள் அங்கு சென்று அடையாளம் காட்டி அதனைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கு சேவையாளர்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை9

திருகோணமலை அன்பு இல்லத்தினால் அண்மையில் வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் சேவையாளர்களாகக் கடமையாற்ற விரும்புபவர்களைத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அந்த இல்லத்தின் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

யுத்தத்தால் தாய், தந்தை ஆகிய இருவரையும் இழந்த சிறுவர்கள் இந்த நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையங்களில் சேவை மனப்பான்மையுடன் இணைந்து சிறுவர்களைப் பராமரிக்க விரும்புவர்கள் அன்பு இல்லம் 167, மத்திய வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என்றும் -

அன்பு இல்லப் பொறுப்பாளர் ச.சுந்தரலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார். (க-7)


**ஆங்கிலக் கல்லூரி**

அச்சுவேலி.

O/L கணிதம்
துரிதமீட்டல்
வினா விடை.
ஆரம்பம்:- புதன் 3.30p.m.

(C/17331)

திரு.சுந்தரச்செல்வன்



**சித்திரம்**

2002, 2003 A/L
புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன.
தரம் 6 - O/L, A/L
வரை நடைபெறுகிறது.
தரச் சான்றிதழுடன்
I.A.T.
இல. 76, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்.

(89871)



## கல்விச்சாலைக் காட்சிகள்



யாழ்.சென்.ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் ஆங்கில தினவிழா அண்மையில் நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சாந்தி விக்னராஜா மாணவி ஒருவருக்குச் சான்றிதழ் வழங்குவதை முதலாவது படத்திலும் -

வித்தியாலய அதிபர் அருட்செல்வி ஜீ.செல்வராணி, அருட்சகோதரி மேரி ஜெரோம், அருட்தந்தை எஸ்.டன்ஸ்ரன் ஆகியோர் நிகழ்வுகளை அவதானித்துக் கொண்டிருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (க-7)



ஆனைப்பந்தி மெ.மிஷன் வித்தியாலயத்தில் ஆசிரியர்களின் பங்களிப்புடன் புதிதாக அமைக்கப்பட்ட ஸ்ரீ மகா கணபதி ஆலய விக்கிரக பிரதிஷ்டை மகா சாந்தி வைபவம் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். வித்தியாலய அதிபர் நயினை எஸ்.எஸ்.பிள்ளையும் காணப்படுகின்றார். (ஜ-51)



வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. அதையொட்டிய பரிசளிப்பு நிகழ்வில் வித்தியாலய அதிபர் மு.செல்லையா உரையாற்றுவதையும், பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட கலாநிதி க.குணராசா, கௌரவ விருந்தினர்களான அ.பஞ்சலிங்கம், மு.மகாலிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (ஜ-6)



மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் 15 வயதுக்குட்பட்ட வலைப் பந்தாட்ட அணி மாவட்ட மட்டப் போட்டியில் முதல் இடத்தையும், மாகாண மட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டது.

அதிபர், ஆசிரியர்கள் சகிதம் வலைப்பந்தாட்ட அணியினர் எடுத்த படம். (ஜ)

## விளையாட்டு நிகழ்வு

வலி.வடக்கு, ஜூலை 9

நல்லூர்ப் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட ... சமூக நிலையங்கள் இடையே பிரதேச சபையினால் நடத்தப்பட்டு வரும் 9 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் கோண்டாவில் மத்திய சனசமூக நிலையமும் திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையமும் மோதுகின்றன. (க-86)

## பன்றிகளால் பயிர்கள் அழிவு

புன்னாலைக்கட்டுவன், ஜூலை 9

குட்டியபுலம் பிரதேசத்தில் பயிர்களைப் பன்றிகள் அழித்து வருவதாக இப்பகுதி விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

மரவள்ளி, கரட், வெங்காயம் போன்றவற்றையே பன்றிகள் அழித்து நாசப்படுத்தி வருகின்றன. (க-133)

### தமிழ் மொழிப் புறக்கணிப்புக் குறித்து அதிகாரிகள் கவலை

# குடாநாட்டு அரச அலுவலர்களுக்கு சிங்கள மொழியில் சுற்றுநிருபங்கள்!

## தேசியமொழி என முழங்கினாலும் நடைமுறையில் இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 9

குடாநாட்டிலுள்ள அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கு கொழும்பிலுள்ள அவற்றின் தலைமை அலுவலங்களில் இருந்து அனுப்பபட்டும் சுற்று நிருபங்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் என்பவற்றில் பெரும்பாலானவை தனிச்சிங்களத்தில் அனுப்பப்படுவதனால் அவற்றை விளங்கிக் கொள்வதில் பல சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அலுவலகங்களில் பணிபுரியும் மேலதிகாரிகளுக்கு அனுப்பப்படும் சுற்றுநிருபங்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு வந்து சேரும் கடிதங்கள் கூட சிங்களமொழியிலேயேகாணப்படுகின்றன.

இதனால் இவற்றை வாசித்து விசயத்தை அறிந்து கொள்ள முடியாது அவர்கள் திண்டாடுகிறார்கள்.

யாழ்ப்பாணம் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை, தொழில் திணைக்களம், வரி மதிப்பீட்டுத் திணைக்களம் உட்பட மற்றும் சில அரச திணைக்களங்களுக்கே இவ்வாறு சிங்கள மொழியில் சுற்று நிருபங்கள் அனுப்பப்பட்டு வருவதாகப் புகார் கூறப்படுகிறது.

இது தொடர்பாக யாழ்ப்பாணத்திலுள்ள திணைக்களம் ஒன்றின் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் —

சிங்கள மொழியை வாசிக்கத் தெரிந்தவர்கள் இல்லாத திணைக்களங்கள் தமக்கு அனுப்பப்படும் சுற்றுநிருபங்களை வாசித்து அறிந்து கொள்வதற்குச் சிங்களம் தெரிந்த வெளியாள்களின் உதவியை நாடவேண்டியுள்ளதாகவும்—

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும், அரசாங்கத்துக்கும் பல தடவைகள் எடுத்து விளக்கியும் எந்தப் பலனும் ஏற்படவில்லை எனவும் கவலை தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சர் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றபோதும் யாழ்ப்பாணத்திலுள்ள திணைக்களங்களுக்கு அனுப்பப்படும் சுற்று நிருபங்களில் தமிழ் மொழி புறக்கணிக்கப்படுவது மிகவும் வேதனையைத் தருகின்றது எனவும் —

தமிழ் மொழிக்குத் தேசிய அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதை அடிக்கடி ஜனாதிபதி முதல் அரசியல்வாதிகள் வரை முழங்கிவருகின்றபோதும் தமிழர்களுக்கு ஆகக் குறைந்த இந்த உரிமை கூட கிடைக்கவில்லையே எனவும் அந்த அதிகாரி அங்கலாய்த்துக் கொண்டார். (க-4)

## சமய சந்நிதிகளில்

குப்பிளான் கேணியடி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய புனராவர்த்தன சம்புரோட்சண மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (க-4-133)

## நினைவு விழா

வடமராட்சி, ஜூலை 9

மெதடிஸ்த திருச்சபை மிஷனரிகள் இலங்கைக்கு வந்த 187 ஆவது ஆண்டை நினைவு கூரும் விழா பருத்தித்துறை மெதடிஸ்த ஆலயத்தில் சபைக் குரு அருட்தந்தை ஜி. ஏ. சதீஸ் தலைமையில் நடைபெற்றது.

இதனை ஒட்டிய வழிபாட்டில் மிஷனரிப் பாடசாலைகளான பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்கள் கலந்து கொண்டனர். (ஜ-173)

### 14 வருடங்களின் பின்னர்

# நோர்வே நாட்டிலிருந்து வந்த ஈழத்தமிழர் பொலீஸாரால் கைது

கொழும்பு, ஜூலை 9

பதினான்கு வருடங்களின் பின்னர் நோர்வேயிலிருந்து தனது குடும்பத்துடன் கொழும்பு திரும்பிய ஈழத்தமிழர் ஒருவர் நேற்று முன்தினம் கோட்டைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மோகனதாஸ் கார்த்திகேசு (வயது 34) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

உறவினர் ஒருவரின் திருமண நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காக இவர் குடும்பத்துடன் கொழும்பு வந்திருந்தார் என்றும்—

மீண்டும் நோர்வே செல்வதற்காக விமானச்சீட்டுப் பெறச் சென்ற சமயம் சிவில் உடையணிந்த பொலீஸார் இவரைக் கைது செய்து கோட்டை பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர் என்றும்— தெரிவிக்கப்பட்டது. (க-7)

# பசு வதையை இயலுமானவரை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்

## மேயரின் ஏற்பாட்டில் நடந்த கலந்துரையாடலில் முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ். மாநகர சபைப்பகுதி எல்லைக்குள் இயலுமானவரை பசுக்கள் கொல்லப்படுவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு பசுவதை தொடர்பாக யாழ். மாநகர சபை மேயர் என். ரவிராஜ் யினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் மாநகர சபை அதிகாரிகள், பசுக்களைப் பாதுகாப்பதற்கான சமய நிறுவனங்களின் பிரதிநிதிகள் மாட்டிறைச்சிக் கடை உரிமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாநகர எல்லைக்குள் புதிதாக மாட்டிறைச்சிக் கடைகள் கொல்களங்களை அமைப்பதாயின் அவை குறித்து இங்குள்ள சமய, சமூக நிறுவனங்கள், குருமார்கள், ஆலயங்கள், பொதுமக்களது ஒப்புதல் பெறப்படுதல்வேண்டும் என்றும் அங்கு வலியுறுத்தப்பட்டது.

1990 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தது போல யாழ். மாநகர சபை எல்லைக்குள் பசுமாடுகளைக் கொல்லக் கூடாது என்று யாழ். மாநகர சபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும் என்றும் — யாழ். மாநகர சபை எல்லைக்குள் பசுவதையைத் தடைசெய்யவேண்டும் என்றும் அக்கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

## மீன் பிடிக்க அனுமதி

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை முனைப்பகுதியில் தங்கியுள்ள மீனவர்கள் இன்பருட்டி, சுப்பர்மடம் ஆகிய பகுதிகளில் மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினர் தெரிவித்தனர்.

பலாலி, மயிலிட்டி ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை முனைப் பகுதியில் தங்கியுள்ளவர்களுக்கு இப்பகுதிக் கடலில் மீன் பிடிக்க ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்தே வடமராட்சி கிழக்குப் பகுதி மீனவர்களுக்கு இன்பருட்டி, சுப்பர்மடம் பகுதிகளில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-117)

### பேரியல் அஷ்ரப்புக்கு எதிரான

# முஸ்லிம் காங்கிரஸின் மனு; இன்று விசாரணை நடக்கும்

கொழும்பு, ஜூலை 9

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவராக அமைச்சர் பேரியல் அஷ்ரப் பணியாற்ற முடியாது என உத்தரவிடுமாறு கோரி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணை இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் டாக்டர் ஹஸ்ரத் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் இது போன்றதொரு மனுவைக் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்ததும்—

அந்த மனுவை விசாரணை செய்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மனுவைத் தள்ளுபடி செய்து பேரியல் அஷ்ரப் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவராகத் தொடர்ந்து பணியாற்றலாம் என்று தீர்ப்பு வழங்கியிருந்ததும்— தெரிந்ததே.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் என்ற கோதாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புதிய மனுவை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுள்ளது. (ஐ-3)

# சுகாதாரப் பயிற்சிபெற்ற 280 பேருக்கு சான்றிதழ்

தென்மராட்சி, ஜூலை 9

சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் சுகாதாரத் தொண்டர்களுக்கான பயிற்சியினை முடித்த 280 பேருக்கான பயிற்சிச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளியன்று புலோலி பொது நூல் நிலைய மண்டபத்தில் தொண்டர் சங்கத் தலைவர் ப. இரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி, பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன், ஈ. பி. டி. பியின் தென்மராட்சி அமைப்பாளர் சூ. அலெக்சாண்டர் (சாள்ஸ்) ஆகியோர் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கினர்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 180 தொண்டர்களும், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 100 தொண்டர்களும் பயிற்சி பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# நவாலி தேவாலயம் மீதான குண்டு வீச்சின் நினைவு நாள்

## இன்று அங்கு விசேட பிரார்த்தனை

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீது 1995 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா விமானப் படை விமானங்கள் நடத்திய கோரக் குண்டு வீச்சு நிகழ்வின் ஆறாவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் நினைவாக சென். பீற்றர்ஸ் ஆலயத்தில் விசேட வழிபாடு இடம்பெறவுள்ளது. உயிரிழந்தோரின் உருவப்படங்களுக்கு ஒளியேற்றும் நிகழ்வும் அங்கு இடம்பெறும்.

இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களில்ஒருவரான நவாலி வடக்கு (ஜே—134) கிராம அலுவலர் செல்வி ஹேமலதா செல்வராஜாவின் நினைவுக்கல் திரை நீக்க வைபவமும் இன்று நவாலி வடக்கு புலவர் வீதியில் இடம்பெறும்.

1995 ஜூலையில் வலிதென் மேற்குப் பகுதியூடாக ஸ்ரீலங்காப் படைகள் மேற்கொண்ட 'முன்னேறிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்திலும் அதன் சூழலிலும் தஞ்சமடைந்திருந்த பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் மீது விமானப்படை விமானங்கள் நடத்திய கண்மூடித்தனமான குண்டு வீச்சில் 157 பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகினர். பெரும் எண்ணிக்கையானோர் காயமடைந்தனர். (ஐ-185)

### நீர்வேலி கால்நடை நிலையத்துக்கு

# கோழிகள், மாடுகளுக்கான தடுப்பு மருந்துகள் வந்தன

கோப்பாய், ஜூலை 9

நீர்வேலியில் இயங்கும் கோப்பாய் கால்நடை வைத்திய நிலையத்துககுக் கோழிகள், மாடுகள் ஆகியவற்றுக்கான தடுப்பு மருந்துகள் வந்துசேர்ந்தன.

கால்நடை வளர்ப்போர் அலுவலக நாள்களில் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோழிகளுக்கான அம்மை நோய்த்தடுப்பு மருந்துகளை இப்பகுதிச் சனசமூக நிலையங்கள் ஊடாக விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

இதேவேளை --

நல்லின வெட்டுப் புற்கள் அங்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. இவற்றையும் கால்நடை வளர்ப்போர் அலுவலக நாள்களில் வந்து பெற்றுக்கொள்ள முடியும் எனக் கால்நடைப் பண்ணை தெரிவித்துள்ளது. (ஐ-72)

## பதவியேற்பு

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாகிகள் பதவியேற்கும் வைபவம் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10மணிக்கு மருதனார்மடத்தில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் விவசாய நிறுவனத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் புதிய தலைவர் டாக்டர் எஸ் யோகேஸ்வரன் தலைமையில் புதிய நிர்வாகம் பதவியேற்கவிருக்கின்றது.

இந்த நிகழ்வில லயன்ஸ் கழகங்களின் பிராந்திய இணைப்பாளர் லயன் எஸ். பத்மநாதன், லயன் திருமதி புஸ்பம் பத்மநாதன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (ஐ-3)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜுலை9

குடாநாட்டிலிருந்து இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் இம் மாதம் 4ஆம் திகதிவரை அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

### யாழ்ப்பாணம்

(200155ஏ) (100129ஏ) (120005ஏ)
(120015ஏ) (120015பி) (120029ஏ)
(120029பி) (120029சி) (120029டி)
(120029ஈ) (120031ஏ) (120037ஏ)
(120037பி) (120042ஏ) (120042பி)
(120042சி) (120050ஏ) (120055ஏ)
(120055பி) (120059ஏ) (120059பி)
(120072ஏ) (120072பி) (120073ஏ)
(120078ஏ) (120082ஏ) (120092ஏ)
(120104ஏ) (120116ஏ) (120116பி)
(120128டி) (120138ஏ) (120216ஏ)
(120260ஏ) (120374ஏ) (120374பி)
(120374சி) (185570ஏ) (185570பி)
(187290ஏ) (187290பி) (187290சி)
(187295ஏ) (187295பி) (187295சி)
(189180ஏ) (189740ஏ) (189740பி)
(189740சி) (190822ஏ) (191758ஏ)
(193015ஏ) (193388ஏ) (193439ஏ)
(195429ஏ) (195429பி) (195429சி)
(195429டி) (195590ஏ) (195704ஏ)
(195708ஏ) (195709ஏ) (195725ஏ)
(195729ஏ) (195730ஏ) (195954ஏ)
(195954பி) (195954சி) (195958ஏ)
(195958பி) (197251ஏ) (197251பி)
(197251சி) (197251டி) (197251ஈ)
(197260ஏ) (197266ஏ) (197266பி)
(197266சி) (197266டி) (197266ஈ)
(197287ஏ) (197299ஏ) (197299பி)
(197299சி) (197310ஏ) (197310பி)
(197358ஏ) (197359ஏ) (197366ஏ)
(197366பி) (197370ஏ) (197407ஏ)
(197413ஏ) (197413பி) (197418ஏ)
(197418பி) (197418சி) (197443ஏ)
(197453ஏ) (197458ஏ) (197458பி)
(197458சி) (197461ஏ) (197503பி)
(197503சி) (197503டி) (197505ஏ)
(197515ஏ) (197539ஏ) (197550ஏ)
(197563ஏ) (197563பி) (197584ஏ)
(197587ஏ) (197592ஏ) (197602ஏ)
(197625ஏ) (197625பி) (197625சி)
(197630ஏ) (197648ஏ) (197657ஏ)
(197671ஏ) (197674ஏ) (197682ஏ)
(197686ஏ) (197686பி) (197690ஏ)
(199803ஏ) (199803பி) (199813ஏ)
(199825ஏ) (199862ஏ) (199862பி)
(199862சி) (199862டி) (199866ஏ)
(199866பி) (199866சி) (199901ஏ)
(199911ஏ) (199932ஏ) (199932பி)
(199932சி) (199937ஏ) (199939ஏ)
(199953ஏ) (199953பி) (199968ஏ)
(199970ஏ) (199970பி) (199970சி)
(199970டி) (199970ஈ) (199980ஏ)
(199984ஏ) (199984பி)(199984எவ்)
(199988ஏ) (199996ஏ)

### கோப்பாய்

(120007ஏ) (120007பி) (195399ஏ)
(197578ஏ) (197610ஏ) (197610பி)
(197610சி) (197884ஏ) (199835ஏ)
(199835பி) (199835சி) (199835டி)
(199835ஈ) (199877ஏ)

### நல்லூர்

(120001ஏ) (120009ஏ) (120009பி)
(120009சி) (120009டி) (120013ஏ)
(120013பி) (120013சி) (120030ஏ)
(120045ஏ) (120045பி) (120051ஏ)
(120085ஏ) (120086ஏ) (120102ஏ)
(120102பி) (120102சி) (120102டி)
(166032ஏ) (171080ஏ) (171080பி)
(190785ஏ) (190785பி) (190785சி)
(190785டி) (190827ஏ) (190827பி)
(193189ஏ) (193338ஏ) (193338பி)
(195377ஏ) (195377பி) (195436ஏ)
(195468ஏ) (195502ஏ) (195502பி)
(195708பி) (195708சி) (195965ஏ)
(197357ஏ) (197383ஏ) (197447ஏ)
(197447பி) (197512ஏ) (197512பி)
(197524ஏ) (197524பி) (197554ஏ)
(197554பி) (197577ஏ) (197577பி)
(197608ஏ) (197618ஏ) (197618பி)
(197618சி) (197618டி) (197681ஏ)
(197681பி) (197681சி) (198945ஏ)
(199227ஏ) (199227பி) (199828ஏ)
(199830ஏ) (199847ஏ) (199851ஏ)
(199858ஏ) (199876ஏ) (199880ஏ)
(199880பி) (199898ஏ) (199898பி)
(199927ஏ) (199927பி) (199927சி)
(199927டி) (199927ஈ) (199927எவ்)
(199949ஏ) (199960ஏ) (199981ஏ)
(199994ஏ)
(க-10)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கருணாகர சிங்கம் என்பவருடைய தே.அ.அட்டை (இல.462531915V), வி.அ.அட்டை (இல.0905017914) என்பனவும் நாகேஸ்வரி என்பவருடைய தே.அ. அட்டை (இல.486210239V), வி.அ. அட்டை (இல.0905017915) என்பனவும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கொக்குவில் கிருஷ்ணா ஜுவலரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (89864)

அருணகிரிநாதன் பிரசன்னா என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.0902011159), பாடசாலை அ.அ. என்பன திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கல்லூரி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவுமாறு தயவாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. (89859)

பாலச்சந்திர கணேசசர்மா-கிரிதர சர்மா என்பவருடைய வி.அ.அ.(இல. 0904020543) 27-06-2001 புதனன்று சுழிபுரத்திற்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கொக்குவில் பொற் பதி விநாயகர் ஆலயம், கொக்கு வில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. (89855)

குழந்தை விசுவலிங்கம் என்பவரது விசேட அ.அ.(இல.091010408), தேசிய அ.அட்டை, 500-5963 என்ற இலக்கமுள்ள மோட்டார் வாகனத்தின 2000ஆம் ஆண்டுக்கான அனுமதிப் பத்திரம ஆகியன 02.07.2001 அன்று நிலாவரைக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கு.பரமலிங்கம், தியேட்டர் வீதி, இணுவில் கிழக்கு என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (89870)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரசாங்க திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகம் பார்க்கும், 1970ஆம் ஆண்டில் பிறந்த செவ்வாய்த் தோஷமற்ற மணமகனுக்கு அழகான மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது) தொடர்பு:- விளம்பர இல.1319 மே/பா உதயன். (89840)

### மேடை நாடகம்

வர இருக்கும் இலங்கை வானொலி நாடக விழாவில் 330 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் 'பிறந்த மண்' நாடகம் மேடை ஏறுகின்றது. அஞ்சல் செய்வார்கள் கேட்டு மகிழுங்கள். (89763)

## மின் வசதி இருந்தும் குப்பி விளக்கில் படிக்கும் அவலம்

மின்சார விநியோகம் இருந்தும் குப்பி விளக்கில் பரீட்சைக்குப் படிக்கும் அவலநிலை துன்னாலை வடக்குப் பிரிவு மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாகக் குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்படுகிறது.

தினமும் இரவு 10.30 மணிக்குப் பின்னரே 'பல்பு'கள் சீராக எரிகின்றன. ஒன்றுவிட்டு ஒருதினம் வழங்கப்படும் மின்சாரத்தினால் மாலை 6 மணி தொடக்கம் மின்விளக்குகள் குப்பிவிளக்கை விட குறைந்த வெளிச்சத்திலேயே ஒளிர்கின்றன. - இவ்வாறு மாணவர்கள் கூறுகின்றனர்.

இந்த நிலைமையினால் குப்பி விளக்கிலேயே பாடங்கள் படிக்க வேண்டியுள்ளதாக ஓகஸ்ட் மாதத்தில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (க-117)

## நாய் குறுக்கே பாய்ந்ததால் ஏற்பட்ட விபத்து

தென்மராட்சி,ஜுலை9

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வீதியின் குறுக்கே வந்த நாயுடன் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் கடந்த சனிக்கிழமை பகல் மண்டான் பகுதியில் இடம்பெற்றது.

தலையில் பலத்த காயமடைந்தவரணி கரம்பைக்குறிச்சியைச் சேர்ந்த சுந்தையாபிள்ளை சுதர்ஸன் (வயது 26) என்பவர் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். (க-117)

## பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான உற்சவ ஸ்ரீ வரதராஜ சுவாமி நூதன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

கிரியாரம்பம் :-09. 07. 2001 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு
10. 07. 2001 செவ்வாய்க்கிழமை கும்பாபிஷேக தின மணவாளக் கோல சங்காபிஷேகம் (1008).
பால்காப்பு :- 10-07-2001 செவ்வாய்க்கிழமை காலை முதல் 11. 07. 2001 புதன்கிழமை பிற்பகல் ஒரு மணி வரை அடியார்களின் பால்காப்பு சாத்தும் வைபவம் இடம்பெறும்.

12-07-2001 வியாழக்கிழமை பகல் 10. 35 மணிக்கு வரும் மிதுன லக்கினத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து ஆசியுரை, தசதர்சனம், அபிஷேகம், பூஜை என்பன நிகழும். பிற்பகல் 3 மணிக்கு பூஜை நடைபெற்றுப் பின்னர் உற்சவம் நிகழும்.

கும்பாபிஷேகக் குரு :- *பிரம்மஸ்ரீ.ச.சோமாஸ்கந்தக் குருக்கள்.*
*(மேற்படி தேவஸ்தான பிரதமகுரு)*

*பொன்னாலை.* (89868) தேவஸ்தான பரிபாலன சபை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தொழில்நுட்பக் கல்லூரி
முன்னாள் விரிவுரையாளரும்
எனது நண்பனுமாகிய
**திரு.ந.யோகராஜன்**
J.P.(ALL ISLAND)
B.A, P.G. Dip.in Edu. & Dip in Tech. Edu.

அவர்கள் தொழில்நுட்பக் கல்விப் பயிற்சிக் திணைக்களத்தின் பிரதிப் பிராந்திய பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

*வாழ்த்துபவர்:-* *தொழில்நுட்பக் கல்லூரி, சிற்றுண்டிச்சாலை நடத்துநர்*
(89878) கு.பரமேஸ்வரன் குடும்பத்தினர்.


## Silver Shield

*தயாரிப்புக்களான*
சொக்ஸ் வகைகள்,
நூல்வகைகள்,
பெனியன்கள்
பலதரப்பட்ட
CURVFORM BRASSIERS
இன்னும் பல.......



*கொழும்பு விலையில் பெற்றுக்கொள்ள:*
**Srimurugan**
303, K.K.S. Road, Jaffna.
Tel:- 021-3588, 2670 Fax:- 3214, email:- del-smskr@euraka.lk
*குறிப்பு:- பாடசாலைகளுக்கும் மொத்த வியாபாரிகளுக்கும் விசேட கழிவு வழங்கப்படும்.* (C/17337)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் 23 - 10 - 1937

விண்ணில் 12 - 06 - 2001



### அமரர் சிற்றம்பலம் தியாகராசா
(எழுவைதீவு)

கடந்த 12. 06. 2001இல் இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்திகேட்டு எங்கள் துயரில் பங்கு கொண்டு அனுதாபங்கள் தெரிவித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, நாளை (10. 07. 2001) செவ்வாய்க்கிழமை காலை வீரபத்திர ஆலயத்தின் முன்பாகக் கடற்கரையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் எதிர்வரும் (12. 07. 2001) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
திருமதி தியாகராசா சரஸ்வதி,
*முதலாம் வட்டாரம் வடக்கு.*
*எழுவைதீவு.* (89869)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## சுன்னாகம் வர்த்தக சமூகத்தின் கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் அங்கத்தவரும் கலா கபே தேநீர்க் கடை உரிமையாளருமாகிய

**சி.கனகரட்ணம்** *(பஞ்சிகாவத்தை)*

அவர்கள் காலமானதையிட்டு சங்கத்தின் சார்பிலும், வர்த்தகர்களின் சார்பிலும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிர்வாகம்,
(89875) சுன்னாகம் வர்த்கர் சங்கம்.

## மரண அறிவித்தல்

### சின்னையா கனகரத்தினம்
*(உரிமையாளர், கலா கபே, சுன்னாகம்)*

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கனகரத்தினம் நேற்று (08-07-2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சிவக்கொழுந்துவின் அன்பு மகனும்; காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லம்மாவின மருமகனும், சிவசோதியின் பாசமிகு கணவனும், ரவீந்தா, பிரதீபன், பிரபாகரன் (வவுனியா), ராதிகா (பட்டப்படிப்புக் கல்லூரி), நந்திகலா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சரஸ்வதி புஷ்பராசா (வவுனியா), திருமதி பூபதி கிருஷ்ணநாதன் (கொழும்பு), நடராசா (வவுனியா), சிவஞானம் (கொழும்பு), இராசலிங்கம் (கனடா), குணரத்தினம் (ஜேர்மனி), திருமதி சாந்தினி ஞானத்துரை ஆகியோரின் சகோதரனும், நவரத்தினம், பேரின்பநாதன், சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08-07-2001) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.பிரதீபன்
(மகன்)

*முத்துக்கிருஷ்ணர் வீதி,*
*சுன்னாகம்.* (89873)

### அரசியல் குழப்பத்துக்கு மத்தியில்

# சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி நிலைமையைச் சீராக்க முயற்சி

கொழும்பு,ஜூலை9

தேசிய அரசு ஒன்றை அமைப்பதற்கான முன்முயற்சிகளில் பிரதமர் மற்றும் சிரேஷ்ட அமைச்சர்கள் தீவிரமாக ஈடுபட்டுவரும் அதே நேரத்தில் சர்வகட்சி மாநாடு ஒன்றைக் கூட்டவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

நாட்டில் தற்சமயம் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலை குறித்து ஆராய்வதற்காகவே சர்வகட்சி மாநாட்டை நடத்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சர்வகட்சி மாநாடு தொடர்பாக அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஐ.தே.கவுடனும், ஜே.வி.பியுடனும் தொடர்பு கொண்டு பேசியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

சர்வகட்சி மாநாடு ஒன்று கூட்டப்பட்டால் அதில் பங்குபற்றுவதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் தேசிய அரசு அமைக்கும் யோசனையை உடனடியாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

ஆனால் சர்வகட்சி மாநாடு குறித்து ஐ.தே.க. எத்தகைய கருத்துகளையும் வெளியிடவில்லை. அரசிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை திசை திருப்புவதில் அரசாங்கம் கவனம் செலுத்துவதாக ஐ.தே.க.பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை தற்போதைய அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் அரசாங்கம் ஐ.தே.கவுடன பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரியவருகின்றது. (ஐ-3)

## பேரவைக்கு நிதி உதவி

பளை கலாசார பேரவையின் வளர்ச்சிக்கென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இரண்டு லட்சம் ரூபாவினை வழங்கியுள்ளதாகப் பேரவையின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

நாடக சீன்கள், ஜெனரேற்றர், வாத்தியக் கருவிகள், ஒலிபெருக்கிச சாதனங்கள் ஆகியனவற்றைக் கொள்வனவு செய்ய இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பச்சிலைப்பள்ளி இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தினர் அண்மையில் அமைச்சரைச் சந்தித்து விடுத்த வேண்டுகோளையடுத்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

(ஐ-117)

## முதலாம் ஆண்டு நினைவு தினம்



இலங்கையில் மலர்வு 1980 - 12 - 05

இந்தியாவில் உதிர்வு 2000 - 06 - 20

திதி:- சதுர்த்தி 09-07-2001

### செல்வன பா.கோபிநாத்

(விஞ்ஞான பிரிவு மாணவன், யாழ். இந்துக் கல்லூரி)
வேலணை - 4

**நினைவு ஆக்கம்**

இந்துவில் பூத்திருந்த
இன்முகம் எங்கே? எங்கே?
இந்தியா போவதென்றான்
இன்றவன் போனதெங்கே?

கோபி சந்தனம் அதன்
வாசனை எங்கே? எங்கே?
கோபிநாத் எனும்
மனவாசனை போனதெங்கே?

வேலணை ஈந்த காற்றில்
முதல் மூச்சிழுத்தவன் நீ
வேலூரின் காற்றிலேயா
கடைமூச்சு கரையவிட்டாய்?

போதியாய் இருந்து கொண்டு
பொன்மொழி பகன்ற நண்பா!
போதி மாதவன் தேசம் போயோ
ஆவி நீ சோரவிட்டாய்?

நிலமகள் நொந்திடாமல்
மெதுநடை நடந்த நண்பா!
நிலவிற்கு குறைவிலாமல்
புன்னகை புரிந்த நண்பா!

தீயசொல் திட்டிடாத
உனையுமா தீயிலிட்டார்?
பால்மனம் படைத்திருந்த
உனக்குமா பாலைவிட்டார்?

காவிரி கங்கை புனிய
கோதாவாரி புனல்களினால்
புனிதம் பெற்ற மண்ணில்
மனிதம் நீ துறந்ததினால்

அடைந்திடும் உந்தன் ஆன்மா
ஆண்டவன் வீடு என்ற
வேண்டுதல் ஒன்றே அன்றி
வேறென்ன செய்ய நண்பா!

*- நண்பன் அனோமிலன்.*
(மருத்துவ பீடம்)

ஓராண்டு கழிந்தாலும் உங்கள் பிரிவை எங்களால் மறக்க முடியுமா? நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவுகள் தொடரும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**- குடும்பத்தினர்.**

*தகவல்:-*
*ஐ.பாலசுப்பிரமணியம்,*
*292/1 பி. நாவலர் வீதி,*
*நல்லூர்.*
*யாழ்ப்பாணம்.*
(சி17339)

## பாராட்டுகின்றோம்

பச்சிலைப்பள்ளி மக்கள் இடம்பெயர்ந்த வேளையில் எமக்கு வழங்கப்படாதிருந்த 2000 ஏப்ரல் மாதத்திற்குரிய நிவாரணத்தைப் பெற்றுத்தருவதற்கு உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பெரும் பங்காற்றிய

**முகமாலை கிராமிய அபிவிருத்திச் சங்கத்தினரை**
*மனதாரப் பாராட்டுகின்றோம்*

(C/17340) **- பளை வாழ் மக்கள்.**

யாழ்.மத்திய கல்லூரி
பழையமாணவர் சங்கத்தின் அனுசரணையுடன்
யாழ்.மத்தியகல்லூரி நிறுவுநர் நாள்
தினத்தை முன்னிட்டு

**ஜோர்ஜ் வேட்ஸ்ரர்**

*(கிறிக்கெட்டை யாழ்நகரில் முதல் முதலில் அறிமுகப்படுத்தியவர்)*

### ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்துக்கான 6 பேர் கொண்ட 6 ஓவர் கிறிக்கெட் சுற்றுப் போட்டி

விண்ணப்ப முடிவு திகதி : 19.07.2001
அணி ஒழுங்குத் தெரிவு : 22.07.2001 ஞாயிற்றுக்கிழமை பி.ப 4மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும்.

விண்ணப்பப்படிவங்களை வழங்குபவர்:-
எல்.ஓங்காரமூர்த்தி
*(உப அதிபர், யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்)*

போட்டிகள் நடைபெறும் நாள்கள்:-
28.07.2001 சனிக்கிழமை,
29.07.2001 ஞாயிற்றுக்கிழமை

இறுதியாட்டம் : 01.08.2001 புதன்கிழமை
மாலை 2.30 மணிக்கு

செயலாளர்,
(C/17344) யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 10 - 01 - 1929



உதிர்வு 10 - 06 - 2001

### திருமதி தபைாலசிங்கம் குணபூரணம்மா

அமரரின் மரணச் செய்தி கேட்டு எம் துயரில் கலந்துகொண்டு இறுதிக்கிரியைகளின் போது பல வழிகளிலும் உதவிபுரிந்து எமக்கு ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதோடு -

நாளை (10-07-2001) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*வடலியடைப்பு,*
*பண்டத்தரிப்பு.* (C/17343) **- குடும்பத்தினர்.**

**ராஜா** யாழ்ப்பாணம்
3வது வெற்றி வாரமாக
9வேடங்களில் நடித்த
அஜித்,
வசுந்துராதாஸ், நக்மா, மீனா
மற்றும் பலர் நடிப்பில்
**CITIZEN சிட்டிசன்**
தினசரி 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00(பு.நே.)
(C/17760)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
சுப்பர்ஸ்ரார் விஜயசாந்தி,
சரத்குமார், வெங்கடேஸ்
நடித்த
**முதலமைச்சர் ஜெயந்தி**
(ரீல்ஸ் வெளியீடு)
தினசரி: 11.00, 2.30(புதிய நேரம்)
சனி, ஞாயிறுகளில் 6.30 காட்சியும் உண்டு
11.07.2001 முதல்
**மாயி**
(898431)

09.07.1995 நவாலி சென்ற்.பீற்றர்ஸ் தேவாலயம் மீதான தாக்குதல்

## 6 ஆம் நினைவாண்டு



### செல்வி ஹேமலதா செல்வராஜா

**Navaly North - J/134 GRAMA OFFICER**
(BSMS STUDENT - UJF)

இன்று ஹேமலதா செல்வராஜா குழந்தைகள் ஞாபகார்த்த சிறுவர்கள் நிலையம் (HSCMF) 5 ஆம் ஆண்டு நினைவு நாள்.

இவருடன் மரணித்த ஏனைய 157 பேரையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

நினைவு நாள் வழிபாடு நடத்தும் நவாலி சென்ற்.பீற்றர்ஸ் ஆலய பரிபாலகர்களுக்கும் நன்றிகள்.

*'ஹேமா இல்லம்',*
*புலவர் வீதி, நவாலி வடக்கு,*
**TP/Fax:- 070 - 212676**

(C-17341)

திருமதி செ.செல்வராணி
**- HSCMF**

## வாஜ்பாய் - முஷாரப் பேச்சைக் குழப்பச்சதி:

# இந்தியக் கிரிக்கெட் வீரர்களை கடத்தத் தீவிரவாதிகள் திட்டம்

புதுடில்லி,ஜுலை9

இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கும் பாகிஸ்தான் ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப்புக்கும் இடையே இந்த மாதத்தில் நடைபெறவுள்ள பேச்சுக்களைக் குழப்புவதற்கு காஷ்மீர் தீவிரவாதிகள் சதித் திட்டங்களைத் தீட்டியிருக்கின்றனர். அதன் ஒரு நடவடிக்கையாக இந்தியக் கிரிக்கெட் நட்சத்திரங்களைக் கடத்துவதற்கு தீவிரவாதிகள் திட்டமிட்டிருப்பதாக இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இந்தியாவின் பிரபல கிரிக்கெட் நட்சத்திரங்கள் சச்சின் டெண்டுல்கரையும், சவுரவ் கங்குலியையும் கடத்துவதற்குத் தீவிரவாதிகள் திட்டமிட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மும்பைப் பொலீஸார் உஷாரடைந்துள்ளனர்.

எதிர்வரும் 15 ஆம் திகதி முக்கோணக் கிரிக்கெட் போட்டிக்காக இந்திய வீரர்கள் இலங்கை செல்லவுள்ளனர். (ஐ)

# இந்து ஆலயங்களின் வரலாறு திரட்டும் பணி ஆரம்பம்

## ஆவணப்படுத்த ஏற்பாடு நடக்கிறது

மூளாய்,ஜுலை9

வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள இந்து ஆலயங்களின் வரலாறுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பகுதியில் வரலாற்றுச் சிறப்புமிக்க பல ஆலயங்கள் காணப்படுகின்றன. ஒவ்வோர் ஆலயத்துக்கும் தனித்தனியான சிறப்புக்களும், வரலாறுகளும் உள்ளன. இவை பெரும்பாலும் இதுவரை காலமும் தொகுத்து ஆவணப்படுத்தப்படாமல் உள்ளன.

தற்போது வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா மேற்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து ஆலய வரலாறுகளைச் சேகரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஏற்கனவே பல ஆலயங்களின் தொன்மை குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டுவிட்டன. ஆலயங்கள் குறித்த தகவல்களை வழங்க விரும்புவோர் வலி.மேற்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருடன் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-99)

## காணாமற்போனோர் விவகாரம்:

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை விரைவில்

மூளாய்,ஜுலை9

கடந்தகால வன்செயல்களின் போது காணாமற்போனவர்கள் சம்பந்தமான விசாரணைகளின் இறுதி அறிக்கை மிக விரைவில் வெளியிடப்படவுள்ளது.

காணாமற்போனவர்கள் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு தனது விசாரணைகளைத் துரிதப்படுத்தியுள்ளது. இறுதிக் கட்ட விசாரணைகளுக்காக யாழ்ப்பாணம் உட்பட வடக்கு - கிழக்கின் ஏனைய பகுதிகளுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் சென்று விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இன்னமும் மூன்று மாதங்களில் அனைத்து விசாரணை நடவடிக்கைகளும் பூர்த்தியாகிவிடும் என்றும் -

காணாமற்போனவர்களில் யார் யார் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர், அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களின் விவரங்கள் மற்றும் ஏனையவர்களுக்கு என்ன நடந்தது போன்ற விவரங்கள் அடங்கிய இறுதி அறிக்கை மிக விரைவில் தயாரிக்கப்படும் என்றும் மேற்படி விசாரணை ஆணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டவர்கள் நீதிமன்றின் விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-99)


அதிரடி விலைச் சலுகையில் கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள்

IIS நிறுவனம் Delvon Computers(Pvt)Ltd

உடன் இணைந்து வழங்கும்

விசேட விலைச் சலுகை

இச்சலுகை 14-07-2001 வரை மட்டுமே

கணனிகளைப் பார்வையிடுவதற்காக விசேடகாட்சியறை ஒன்று IIS தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

IIS இன் கணனிக் காட்சி அறைக்கு விரையுங்கள்.

வாடிக்கையாளர்களே!

இவ்விலைச் சலுகையில் கணனியைக் கொள்வனவு செய்ய ஆர்வமாக இருந்தும் உங்களிற்கு பணம் ஒரு தடையாக உள்ளதா? IIS வழி காட்டுகிறது.

முற்பண அடிப்படையில் விலைச் சலுகையில் கணனியைக் கொள்வனவு செய்யுங்கள்.

INSTITUTE OF INFORMATICS STUDIES

SALES UNIT

100,Clock Tower Road, Jaffna.

T.PNo-021-2831- email- iis@Slt net.lk

(C17338)


## மன்னார் மீனவர் மீது கெடுபிடிகள்

மன்னார், ஜுலை9

மன்னார்ப் பகுதி மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினரின் கெடுபிடிகள் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.

இதுவரைகாலமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 5மணி வரையிலான 11மணி நேரம் மீனவர்கள் மீன் பிடிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்ததாகவும் தற்போது இது 6மணி நேரமாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

படகில் 15குதிரை வலு கொண்ட வெளி இணைப்பு இயந்திரங்களைப் பொருத்துவதற்கும் கடற்படையினர் தடை விதித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை-

தலைமன்னார் மற்றும் பேசாலை, பள்ளிமுனைக் கடற் பிரதேசத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த 60 மீனவர்களின் 15குதிரை வலு வெளி இணைப்பு இயந்திரங்கள் கடற்படையினரால் அபகரிக்கப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர். (ஐ-6-9)

---

### வடக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு விமானப்படை தயாராகி வருவதாக வேறு சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி கூறுகின்றார்.

விமானப்படையின் 'கிபிர்' மற்றும் 'மிக் - 27' ரக விமானங்கள் முந்திய சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்திய பன்னிரண்டு தாக்குதல்கள் கிளர்ச்சிப் படைகளைக் குழப்பத்தில் ஆழ்த்துவதற்குப் போதுமானவையாக அமையவில்லை என்று அரசு கருதுவதாகவும் அவர் சொன்னார்.

- இப்படி அந்தச் செய்தி வட்டாரம் மேலும் சொன்னது. (உ)

---

### புலிகள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்புக்குத் தென்மேற்கே வாதக்கல்மடு என்னும் இடத்தில் கடந்த ஜுன் 14 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை அரசியல் பிரிவைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர் ஒருவர் இதுபோன்ற கிளைமோர் தாக்குதலில் சிக்கி உயிரிழந்ததையும் -

கடந்த ஜுன் 29 ஆம் திகதி மன்னாரில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள ஆனைவிழுந்தான் என்னும் இடத்தில் படையினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் கடற்புலிகளின் முக்கிய பிரமுகரான கங்கை அமரன் என்பவர் உயிரிழந்ததையும் -

அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

இதுபோன்ற தாக்குதல்களை நடத்துவதற்காக முப்பதுக்கும் மேற்பட்ட கிளைமோர் கண்ணிவெடிகளைப் படையினர் புலிகளின் பகுதிகளுக்குள் எடுத்து வந்திருப்பதாகவும் -

படையினரின் நடவடிக்கைகளுக்கு உதவிய சிலரைக் கைது செய்து விசாரித்தபோது இத்தகவல் தெரிய வந்ததாகவும் -

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறையினர் தெரிவித்திருப்பதாகச் செய்தி வட்டாரங்கள் சில குறிப்பிட்டன. (ஐ-6-9)

---

### இஸ்ரேல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் இருந்தபோது அப்படைகளுக்கு இராணுவ உதவிகளை வழங்கமுடியாது என்று இந்தியா உத்தியோகபூர்வமாக அறிவித்ததற்கு அடுத்த நாள், இஸ்ரேலுடனான இராஜதந்திர தொடர்புகளை மீள ஆரம்பிப்பதான அறிவிப்பை இலங்கை அரசு விடுத்தது.

அந்தத் தொடர்புகள் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு பூர்த்தியான நிலையில் இலங்கைக்கான தூதுவர் ஒருவரை இஸ்ரேல் நியமித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)


2 ஆம் தவணைப் பரீட்சை

(யூலை பதூம் திகதி முதல் 15 வரை)

தரம் I முதல O/L வரை

எல்லாப் பாடங்களும் விடைகளுடன்.

உடன்தொடர்புகொள்ளவும்.

சுந்தர் வெளியீடு

இல 38, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

(89883)


## ஜனாதிபதியின் பிரகடனத்தின் கீழ்

# படையினரின் சோதனைகள் மாற்றம் இன்றித் தொடரும்

கொழும்பு,ஜுலை9

அவசரகாலச் சட்ட விதிகள் காலவதியானதையடுத்து ஜனாதிபதி பிறப்பித்துள்ள கட்டளைகளின் கீழ் படையினரின் தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறும் என்று பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பொது மக்கள் பாதுகாப்புச் சட்டம், பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் ஆகியவற்றின் கீழ் - ஜனாதிபதியால் பிரகடனம் செய்யப்பட்டுள்ள கட்டளைகளின்படி - அடையாள அட்டை பரிசோதித்தல், பொலீஸ் பதிவுகள், வாகனங்கள், கட்டடங்கள் ஆகிவற்றைச் சோதனை செய்தல் போன்ற பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்ந்து அமுல் செய்யப்படும் என்று அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த இந்த நடைமுறைகள் தொடரவேண்டியது அவசியம் என்றும் - சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொலீஸ், இராணுவச் சோதனைச் சாவடிகள் தொடர்ந்தும் செயற்படும் என்றும் -

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் மேலும் சில விதிகள் விரைவில் அமுலுக்கு வரவிருக்கின்றன என்றும் -

அந்த அதிகாரிகள் மேலும் தகவல்கள் வெளியிட்டனர். (ஐ-3)

# மேலும் 219 மாணவர்கள் கலைப்பீடத்துக்கு அனுமதி

யாழ்ப்பாணம்,ஜுலை9

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்துக்கு 2001 - 2002 கல்வியாண்டுக்கு மேலும் 219 மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

யாழ்பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறும் மாணவர் தெரிவில் ஏற்பட்டிருக்கும் வெற்றிடங்கள் குறித்து ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ தேவானந்தா ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்து இந்த அனுமதி கிடைத்திருப்பதாக ஈ.பி.டி.பி. அமைப்பு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

219 மாணவர்களை உடனடியாக உள்வாங்கவும் மேலும் 290 மாணவர்களை வடக்கு - கிழக்குப் பகுதியில் இருந்து யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கவும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## யாழ். ஆஸ்பத்திரியின்

# குழந்தைகள் வார்ட்டுக்கு தொலைக்காட்சி அன்பளிப்பு

யாழ்போதனா வைத்தியசாலைக்கு நேற்று விஜயம் செய்த அமலமரித் தியாகிகள் சபையின் உலகத் தலைவர் பேரருட்திரு.விலஹெய்ம் ஸ்ரெகலின் அங்குள்ள குழந்தைகள் வார்ட்டுக்கு தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை அன்பளிப்புச் செய்தார்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு ஆஸ்பத்திரி வளவில் அமைந்துள்ள அன்னை வேளாங்கண்ணி ஆலயத்திற்கு விஜயம் செய்த அவர் அங்கு மத வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் கூட்டம் ஒன்றையும் நடத்தினார்.

மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஸ்ரெகலின் இன்று காலை கொழும்புக்குச் சென்று அங்கிருந்து நாளை றோமாபுரிக்குச் செல்லவுள்ளார். (ஐ-6-15)

---

### ஜனாதிபதி மீது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஒக்ரோபர் 10 ஆம் திகதி வரை அவர் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஆகக் கூடியது இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைப்பதற்குத் தனக்கு இருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி, தற்போதைய நாடாளுமன்றத்தை இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைத்துவிட்டு, அது முடிந்த கையோடு நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுவதற்கு அவர் திட்டம் தீட்டியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தத் திட்டத்தை முறியடித்து தற்போதைய நாடாளுமன்றத்தை ஜனாதிபதி உடனடியாகக் கலைக்க முடியாத ஓர் அழுத்தத்தை அவருக்கு ஏற்படுத்துவது தொடர்பாக பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. சட்ட அறிஞர்களுடன் முனைப்புடன் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது.

அதன் ஒரு கட்டமாகவே ஜனாதிபதிக்கு எதிராக நாடாளுமன்றத்தில் குற்ற விசாரணைப் பிரேரணையைச் சமர்ப்பிப்பதற்கான திட்டம் குறித்துப் பரிசீலிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எம்.பிக்களில் அரைவாசிக்குக் குறைவானோர் ஒப்பமிட்டு, ஜனாதிபதிக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றைச் சபாநாயகருக்குச் சமர்ப்பித்தால் -

அந்தக் குற்ற விசாரணைப் பிரேரணை தொடர்பாக இறுதித் தீர்மானம் அல்லது முடிவெடுக்கும் வரை, நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கக்கூடாது என்று அரசமைப்பின் 70(i) பிரிவின் உப பிரிவு 'இ' கூறுகின்றது.

இந்தப் பிரிவின் அடிப்படையிலேயே -

ஜனாதிபதிக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணையைச் சமர்ப்பித்து, அதன்மூலம் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாத நிலைமையை ஜனாதிபதிக்கு ஏற்படுத்த ஐ.தே.கட்சி சட்ட அறிஞர்களுடன் ஆலோசனை நடத்தி உரிய ஏற்பாடுகளைச் செய்து வருவதாகக் கூறப்படுகின்றது. (உ)

---

### அல்லாரை ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரஸ்தாப பெண் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தலையில் காயம் அடைந்த நிலையில் தாய் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (உ- 3-117-173)


நிரு ரியூசன் சென்ரர்

கோண்டாவில்

A/L 2002 Maths

Physical Chemistry

ஆரம்பம்:- Tue. Thur. 6.00 a.m. திரு.N.மகேஸ்வரன்

(89882)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.